Registered as a news paper
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடிமெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-551)
T.P.No. 222 2063

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 14 (17.02.2003) திங்கட்கிழமை இதழ் :138

# வேவு பார்க்க அத்துமீறி நுழைந்தது மிக மோசமான யுத்தநிறுத்த மீறல்!



## கிளாலிச் சம்பவம் பற்றி கேணல் தீபன் கண்டனம்

கிளாலிப்பகுதிக்கு அண்மையாக அமைந்துள்ள எமது பெண்போராளிகளின் காவல் நிலைகளுக்கு இராணுவத்தினர் ஆயுதங்களுடன் வந்திருந்தமை மிக மோசமான போர்நிறுத்த மீறலாகும் என புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்திருப்பதாவது, பெண் போராளிகளின் காப்பரண்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் வந்த சம்பவமானது ஒரு அப்பட்டமான போர் நிறுத்த மீறலாகும். நாம் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி சூனியப் பிரதேசத்துக்குள்ளேயே ஒரு பகுதியினரின் அனுமதியின்றி மறுபகுதியினர் வர முடியாது.

நிலைமை இவ்வாறிருக்க, எந்தவிதமான அனுமதியுமின்றி எமது பெண் போராளிகள் காப்பரணுக்குள் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் வந்திருப்பது மிக மோசமான போர் நிறுத்த மீறலாகும். இவர்கள் வந்த தடயங்களை ஆராயும்போது, இவர்கள் எமது நிலைகளை அவதானிப்பதற்கான வேவுப் பணிக்கே வந்துள்ளனர் என்று தெளிவாகின்றது.

இது சமாதான உடன்படிக்கைக்கு முற்றுமுழுதான எதிரான செயலாகும். எனவே, இவ்வாறு முன்பு இராணுவத்தினர் வந்து எமது (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் பிக்குகள் யாழ். வருவர்!

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்பாட்டின் ஒரு வருடப்பூர்த்தியைக் கொண்டாடும் வகையில்- நல்லூரில் சமாதான தீபம் ஏற்ற ஆயிரம் பிக்குகள் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 23 ஆம் திகதி நல்லூரில் சமாதானத் தீபம் ஏற்றும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் இதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பௌத்த மத குரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - எதிர்வரும் 24 ஆம் திகதி சர்வமத சமாதானப் பிரார்த்தனை ஒன்றுக்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருவதாகத் தெரியவருகின்றது.

இதில் தென்பகுதியிலிருந்தும் பெருமளவிலான சர்வமதப் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

(க)

## இடுப்புப்பட்டி விவகாரத்திற்கு இடைக்கால ஒழுங்கு

# சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு இராணுவம் இனி வேண்டாம்!

## புலிகளுடன் இணையச் சென்ற ஐந்து சிறுவர்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையச்சென்ற 18 வயதிற்குட்பட்ட ஐந்து சிறுவர்கள், நேற்று யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் வைத்து அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் தலைமையில் நேற்று மாலை 4 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 18 வயதுக்குட்பட்ட 5 சிறுவர்கள் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் யாழ்.மாவட்டப் பிரதிநிதி லெனார்ட் பிளான்ஸ், யுனிசெப் பிரதிநிதி ஸ்ரீஸ்கந்தராசா, மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலர் என்.முத்துக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச,ரா)

## பதற்றம் கூடும்; எச்சரிக்கிறது கண்காணிப்புக்குழு

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கிலுள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு இராணுவத்தினரை பயன்படுத்துவது பதற்றத்தை அதிகரிக்கச் செய்யும். இதற்கென நன்றாகப் பயிற்சிபெற்ற நவீனமான பொலிஸ் படை ஒன்று தேவையென யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு கருத்து வெளியிட்டுள்ளது.**

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக விடுதலைப் புலிகளின் பெண்போராளிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையும்போது சாதாரண இடுப்புப்பட்டிகளை அணிந்து செல்வதென இருதரப்பும் இணங்கியிருப்பதாக - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுத்த பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகைச் செய்தியின் விபரம் வருமாறு,

விடுதலைப் புலிகளின் போராளிகள் இராணுவச்சீருடையை ஒத்த இடுப்புப்பட்டிகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அணிவதால் ஏற்படும் பிரச்சினைகளைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெங்காயம், உருளைக்கிழங்கு யாழிலிருந்து கொள்வனவு!

### அமைச்சர் ரவி கருணர்நாயக்க இணக்கம்

உள்ளூர் உருளைக் கிழங்கு, வெங்காயம் என்பனவற்றைத் தமது அமைச்சினூடாக கொள்வனவு செய்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

வடபகுதி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு, வெங்காயம் என்பனவற்றைச் சந்தைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அறுவடைகாலத்தில் வெளிநாடுகளிலிருந்து இப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் வடபகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு சுட்டிக்காட்டியதை அடுத்தே, உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து உருளைக்கிழங்கு, வெங்காயம் என்பனவற்றைக் கொள்வனவுசெய்ய அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதனைச் செயற்படுத்துவதற்கு முதற்கட்டமாக - என்னென்ன விலைகளில் இவற்றினைக் கொள்வனவு செய்தால் விவசாயிகள் நன்மை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் பலியான சிப்பாய் வெள்ளியன்று காணாமற்போனார்!

### இரா்ணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

கிளாலியில் பலியான இராணுவச் சிப்பாய் உட்பட மூன்று படையினரும் விடுதலைப்புலிகளின் முன்னணிக் காலவலரண் பகுதிக்குள் பிரவேசிக்கவில்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது - பலியான சிப்பாய் கடந்த வெள்ளியன்று முதல் காணாமற்போயிருந்ததாகவும் தெரிவித்தார்.

மேற்படி சிப்பாய் பலியான சம்பவம் பற்றி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் - யாழ். மாவட்டத்திலுள்ள பிரதி ராணுவப் பிராந்தியத் தளபதிக்கு தொலைபேசிமூலமாக அறிவித்த பின்பே தெரிய வந்தது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை - இது தொடர்பாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இராணுவத்தை நிர்வாகம் நடத்தவிட்டதாலதானே இந்தளவு சிக்கலும்...

## சிப்பாயின் சடலம் ஒப்படைப்பு!

கிளாலிப்பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் காப்பரணுக்குள் நுழைந்து, வேவு நடவடிக்கையில் ஈடுபடமுனைந்தபோது, பெண் போராளிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த இராணுவச்சிப்பாயின் உடல் நேற்று விடுதலைப்புலிகளால் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்டப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 12.15 மணியளவில் இந்தச் சடலம் கையளிக்கும் நிகழ்வு முகமாலைப் பகுதியிலுள்ள விடுதலைப் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
(சி -518) 021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : சு.சுகிர்தன்
முகவரி: வேலியந்தோட்டம், வல்வெட்டித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

பெற்றார் ஒப்பம்


# எல்லைவேலி அமைக்க புலிகள் கொங்கிறீட் தூண் நிறுவுகிறார்கள்

## ஜே.வி.பி. முக்கியஸ்தர் கூறுகிறார்

விடுதலைப் புலிகள் தமது தனி நாட்டு எல்லைகளை வரையறுத்துக் கொள்வதற்காகக் கொங்கிறீட் தூண களை அமைத்து வருவதாக ஜே.வி.பியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அத்தனகலவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போதே, ஜே.வி.பி. முக்கியஸ்தர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகள் கொங்கிறீட் தூண் களை நிறுவி வருவதாகவும், இதனைக் கொண்டு அவர்கள் வட-கிழக்கு எல்லைப் பகுதிகளில் தனி நாட்டை அமைப்பதற்கான எல்லை களை அமைக்கவுள்ளனர்.

எல்லைப்புறத்தில் வாழும் சிங்கள மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் ஜே.வி.பி. முக்கியஸ்தர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை-தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுக்குமாறு, ஜே.வி.பியின் உள்ளூர் தலைவர்களுக்கு ஜே.வி.பியின் தலைவர் உத்தரவிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# அரசியல்வாதிகளுக்கு வழங்கிய ஆயிரம் துப்பாக்கிகள் அபேஸ்?

அரசியல்வாதிகளின் தனிப்பட்ட பாதுகாப்புக்காகப் பொலிஸாரால் வழங்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள், மீளவும் திருப்பி ஒப்படைக்கப்படாதிருப்பதாகப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டுமுதல் அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட ஆயுதங்களே இவ்வாறு மீளத்திருப்பி ஒப்படைக்கப்படாதுள்ளன. ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைப்பதில் அவர்கள் அக்கறை செலுத்தவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை சீனன்குடாவில் உள்ள எரிபொருள் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கணக்கான பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

எரிபொருள் குதங்கள் தொடர்ந்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமேயே இருக்கவேண்டும். இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கக்கூடாது என வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.


## புதிய உயர் கல்லூரி

### அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு - 3551
2 ஆம் பரிசு - 5216
3 ஆம் பரிசு - 1603

ஆறுதல் பரிசுகள்: 4359, 1464, 3484, 1496, 4896, 0178, 3762, 0852, 4436, 5084

09.03.2003 இற்கு முன்னர் வரும் சனி, ஞாயிறு தினங்களில் தமக்குரிய பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்,
புதிய உயர் கல்லூரி.

(248)


## இன்றைய நாள் இனிய நாள்

**17-02-2003 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தனவிருத்தி, குடும்ப மகிழ்ச்சி, நன்மதிப்பு, பெரியோர் மதிப்பு. |
| இடபம் | :- பயனற்ற முயற்சி, வாக்குக் கலகம், வீண்பழி கேட்டல், விரோதம். |
| மிதுனம் | :- தொழில் சிறப்பு, அதிகார விருத்தி, குடும்ப சுகம், அயலவர் உதவி. |
| கர்க்கடகம் | :- காரிய விக்கினம், காலில் ரோகம், மனக்கவலை, பெண்களால் அவமானம். |
| சிங்கம் | :- தொழில் வெற்றி, அதிகாரசித்தி, வாகன லாபம், பெண்களால் நன்மை. |
| கன்னி | :- பலவித செலவுகள், காரிய சித்தி, குடும்ப மனஸ்தாபம், தொழில் சமம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, வாக்குக் கலகம், குடும்ப சிறப்பு, மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | :- மனப்பயம், பொருள் நஷ்டம், தரும காரியம், பிரயாணத்தால் நன்மை. |
| தனு | :- பொருள் வரவு, ஊக்க மிகுதி, பிறருக்குக் கீழ்ப்படிதல், பெரியோர் மதிப்பு. |
| மகரம் | :- வாகன சுகம், காரிய சித்தி, இல்லச் சிறப்பு, தனதானிய விருத்தி. |
| கும்பம் | :- பயனற்ற பிரயாசம், பிரயாணக் கஷ்டம், நிலைப் பிரிவு, பணக்கஷ்டம். |
| மீனம் | :- பண வரவு, பெண்களால் நன்மை, சிநேக நன்மை, அதிகார விருத்தி. |


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள Mitsubishi Delica L 300 முழு ஆசனங்கள் 750 Kg விற்பனைக்கு உண்டு. விலை 350,000 ரூபா. T.V.S. Cham. ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 783, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 2222841. (245)

நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இன்றுமுதல் பிரசாந்த், சிம்ரன் நடித்த
ஜோடி
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
THE MUMMY RETURNS
(சி-544)

ராஜா யாழ்ப்பாணம்.

5 ஆவது வாரமாக

விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த



வசீகரா

10.30, 2.30, 6.30
17 முதல் 19 வரை
இரவு 9.30 மட்டும்
THE MUMMY RETURNS (சி-545)



## எட்டாம் ஆண்டு நினைவுச் சுழிகளில்...

தோற்றம் 18 - 04 - 1942



மறைவு 14 - 02 - 1995

### அமரர் தியாகராசா அரசரத்தினம்

(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி, காரைநகர்)

திதி: 17.02.2003

சட்டென்று நீங்கள் வாடியுதிர்ந்து
எட்டாண்டுகள் சென்றிடினும் ~ நெஞ்சில்
தொட்டெழுதிய உங்கள் முகம்
விட்டகலா என்றும் எம் நினைவுகளில்!

உங்களை என்றும் நினைக்கும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(246)



## சுன்னாகம் அருள்மிகு பழநி ஆண்டவர் ஆலய 19 ஆம் ஆண்டு நிறைவு விழா

*(17-02-2003 இன்று திங்கட்கிழமை)*



வயலும் வயல் சூழ்ந்த நிலமும் ஒரு புறமிருக்க, சிறந்த நன்நகராய் காட்சியளிக்கும் சுன்னாகத்தில், மலையும் மலைசார்ந்த புனித இடத்துள் கலியுகவரதனாக, கற்பகதருவாக பழநி ஆண்டவர் விரும்பியுறைந்துள்ளார். 'முருகா' எனப் பக்தியோடு அழைக்கும் அடியார்களுக்கு வாரி வாரி வரங்களையும் வழங்கும் வள்ளலாக, மனிதப் பிறவிகளின் துன்பங்கள் போக்கும் வேலனாக காட்சியளிக்கின்றான். கதிர்காமம், செல்வச்சந்நிதி போல் மந்திரங்களோ, தந்திரங்களோ இல்லாத அமைதியான கற்பூரதீபப் பூஜை, கேளிக்கை, களியாட்டமின்றி அமைதியான உறைவிடமாய் அடியார்களின் நீதிமன்றாய் விளங்குகின்றது இவ் ஆலயம்.

இன்றுமுதல் அனைத்து அடியார்களும் ஒன்றுகூடி மெய்யன்புடன் வழிபட்டு பழநி ஆண்டவர் அருள் பெற்றுய்திடுக!!

இன்று நடைபெறும் ஆண்டு விழாவையொட்டி அபிஷேக ஆராதனையும், அன்னதான வைபவமும் இடம்பெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(249) பழநி ஆண்டவர் ஆலய அடியார்கள்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 11 - 1926



மறைவு 28 - 02 - 2002

### அமரர் சின்னையா செல்லையா

கண்ணின் மணிபோல் அன்புடன் காத்த எம் தந்தையே
அநாதைகளாய் எம்மை பாரினில் விட்டுச் சென்றீரோ!
ஓராண்டு ஓடி மறைந்திடினும் ஈர விழிகள் காயவில்லை
மாறிடுமோ எம் துயரம்! மறைந்திடுமோ உங்கள் உருவம்.

*என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
மனைவி, மகன்,
மகள்மார், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

வரணி வடக்கு,
தம்பாளை.

(சி-597)

# பத்திரிகைகளில் வெளியாகி இருப்பது ஆனந்தசங்கரியின் தனிப்பட்ட கருத்தா?

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேள்வி

யாழ். பொதுநூலகத் திறப்புவிழா தொடர்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கைக்கு யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

யாழ். மாவட்டத்திலுள்ள உயிர்த்துடிப்பான அனைத்துப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து முழுமைபெறாத நூலகத் திறப்பு விழாவைப் பிற்போடுமாறும், துரிதகதியில் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்யுமாறும் ஒருமனதாகத் தீர்மானம் எடுத்தனர்.

எம்மால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மாநகர முதல்வரும், உறுப்பினர்களும் உதாசீனப்படுத்தியதாலும், திறப்பு விழாவைத் திட்டமிட்டபடி நடத்தியே தீருவேன் என முதல்வர் அடம்பிடித்து நின்றதாலும் - இவ்விடயம் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினருக்கு கொண்டுவரப்பட்டது.

எமது கருத்துக்களின் நியாயத் தன்மைக்கு மதிப்பளித்தே விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினர் - மாநகர முதல்வருடன் நேரில் சந்தித்து விடயத்தைத் தெளிவுபடுத்தினாரே தவிர, தலையிடவில்லை. இதைச் செல்லன் கந்தையன் புரிந்துகொள்ள வேண்டும்மென்பது எமது நிலைப்பாடாகும்.

விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தி மாநகர முதல்வர் கருத்துக் கூறியிருப்பது மிகவும் வேதனைக்குரியது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இது ஏற்புடையதுமல்ல!

மாபெரும் வரலாற்றுத் தவறிலிருந்து எம்மைப் பாதுகாக்கவே முழுமைபெறாத யாழ்ப்பாணப் பொது நூலகத்தைத் திறப்பதை நாம் பிற்போடும்படி வேண்டினோம். அதுதவிர, எந்த அரசியல் மற்றும் சமூகப் பிற்போக்குத்தனமும் காரணமல்ல!.

யாழ்ப்பாணப் பொது நூலகத் திறப்புவிழாச் சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஆனந்தசங்கரியின் பத்திரிகை அறிக்கைக்கு, யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் தனது கடும் ஆட்சேபத்தையும், அதே வேளை கண்டனத்தையும் தெரிவிக்கின்றது.

14 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கை, தங்களது தனிப்பட்ட கருத்தா? அல்லது கட்சியின் கருத்தா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம்.

இது உங்களின் தனிப்பட்ட கருத்தானால், நீங்கள் இன்னும் சாக்கடை அரசியலில் இருந்து உங்களை விடுவித்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் ஊடாகத் தேடல்களைப் பெற்று, சட்டத்தரணியானதாக மார்தட்டி பெருமை பேசும் நீங்கள், முறையான தேடல்களைப் பொது நூலகத்தில் இருந்து பெற்றிருப்பீர்களேயானால், இவ்வாறான கீழ்த்தரமான முறையில பத்திரிகை அறிக்கைவிட்டு சமூகத்தைக் குழப்புவதற்குத் துணிந்திருக்க மாட்டீர்கள்.

அரசியலின் அஸ்தமனத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த தாங்கள், ஏகபிரதிநிதிகள் என்ற அரசியல் அலையில் விபத்தின் காரணமாகக் கரைசேர்ந்து விட்டீர்கள். இது தங்களுக்குக் கிடைத்த ஆதரவெனப் பெருமை பேசமுடியாது. கனவும் காணமுடியாது!

தமிழ் மக்களின் வரலாற்றுப் பெருமைமிக்கதும், தென்கிழக்காசியாவின் முதனமை வாய்ந்ததும், தமிழ் மக்களின் கல்வி, கலை பண்பாட்டின் பெட்டகமான யாழ். பொது நூலகத்தை முற்றுமுழுதான புனரமைப்புடன் இயல்பான சூழ்நிலையில் திறக்கும்படிதானே மாநகர முதல்வரைப் பெருந்தன்மையுடன் கேட்டிருந்தோம். அதற்கு ஆனந்தசங்கரியும், மாநகர முதல்வரும் குழம்பிய நிலையில் நின்றதுடன், மக்களையும் குழப்ப முற்பட்டார்கள் என நாம் கருதுகிறோம். இது இவர்களுக்குக் கைதேர்ந்த கலை. ஆனால், மக்கள் மிகவும் தெளிவாகவுள்ளார்கள்.

மேற்படி நூலகம் திறப்புவிழா சம்பந்தமான விடயம் ஒருவர் இருவர் எடுத்த முடிவல்ல. மாறாக அவர்கள் நினைப்பதுபோல் அல்லது முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன் கூறுவது போலுமல்ல!

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகின்ற உயிர்த்துடிப்புள்ள, மக்கள் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற நூற்றிற்கு மேற்பட்ட பொது அமைப்புக்களின், முந்நூறுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் ஒருமனதாக எடுத்த முடிவின் பிரதிபலிப்பேயிது.

இந்தமுடிவின் அழுத்தம் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் தலையிடவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. இதற்கு வழிசமைத்தவர்கள் மாநகரசபை உறுப்பினர்களும், மாநகரசபையில் அங்கம் வகிக்கும் தேசவிரோதக் கும்பல்களும் என்பதைக் கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதேவேளை, நூலகத்திறப்பு விழா பிற்போடப்பட்டதற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

இந்த நூலகத்தைத் திறந்து வைத்து வரலாற்றில் இடம் பிடித்துக்கொள்ள எடுத்துக்கொண்ட பிராயத்தனம் கைகூடவில்லை என்ற ஆதங்கத்தில், இந்தப் பத்திரிகைச் செய்தி வெளிவந்திருக்கலாம்! அது மனித இயல்புதான்!

ஆனால், இந்த நூலகத்தை வேறொருவர் திறக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால், இவர்கள் நிச்சயமாக எங்களுடன் இணைந்து இதே ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

முழுமை நிறைந்த பொது நூலகத்தை சங்கரியோ அன்றி மாநகர முதல்வர் செல்லன் கந்தையனோ திறந்து வைப்பதற்கு எமக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. அது நல்ல சூழ்நிலையில், முழுமையான வளங்களுடன் திறந்து வைக்கப்பட வேண்டுமென்பதே எம் விருப்பமாகும்.

ஆனால், யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மாநகர முதல்வராக இருந்த காலத்தில், இந்தப் பொதுநூலகம் திறந்து வைக்கும் பெருமைக்குரிய சந்தர்ப்பத்தைத் தடுப்பதாகக் கூறியிருக்கின்றார். இது -

விடுதலைப் போராட்டம் வீரியம் பெற்றுள்ள வேங்கைகளின் காலத்தில் எப்பவோ உக்கி உழுத்துச் செத்துப் போன படுபிற்போக்குத்தனமான சாதிப் பிரச்சினையை இப்போதும் விட்டுவிடத் தயாராகவில்லாத ஆனந்தசங்கரி, மறந்துபோன ஒன்றை மீளக்கிளறுவது எதற்காக? தனது சுய அரசியல் இலாபத்திற்காக அன்றி வேறெதற்கு?

நூலகத்திறப்பு விழாவைப் பிற்போடும்படி நாம் கோரியிருந்தது, பிற்போக்குத்தனச் சிந்தனையில் நின்று அல்ல என்பதைத் தெளிவுபடுத்துவதோடு, இவர்கள் இன்னும் அந்தச் சாக்கடையில் இருந்து மீளவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும் நாம் கோரியிருந்த நூலகப் பெளதீக வளங்கள் என்பது குளிரூட்டியும், மின்னுயர்த்திகளும் அல்ல. தொடர்ச்சியாக அந்த வசதிகளில் மூழ்கிப்போயிருக்கும் அவர் அந்த நினைவுகளோடு இருப்பது ஒன்றும் ஆச்சரியபபடும் விடயமல்ல.

நாம் கேட்ட வசதி வாய்ப்பு என்பது காத்திரமான நூல்களும், நவீன தொழில்நுட்பத் தகவல் தொடர்பு வசதிகள் (இணையத்தள வசதி) போன்ற இன்றைய நவீன உலக ஓட்டத்திற்கு ஏற்றவையே என்பதை ஆனந்த சங்கரிக்குத் தெளிவாக்க விரும்புகின்றோம். இந்த வசதிகளைத் தமிழர்களாகிய நாம் அனுபவித்து உயர்வது தவறென்று கருதுகிறாரா?

தமிழ்ச் சிறார்கள் மரநிழலிலும், புழுதித்தரையிலும், குப்பிவிளக்கிலும் எவ்வித வசதிகளுமின்றிக் கல்வி கற்பதை, வன்னியைப் பார்த்து வந்த மக்கள் பிரதிநிதிகள் ஏன் அறியவில்லை என வினா எழுப்புகிறீர்கள். பாராட்டுகின்றோம். இந்தளவு அவலச் சூழ்நிலையில் வன்னிச் சிறார்கள் கல்வியைத் தொடர்கிறார்கள் என்பதை இப்போதாவது அறிந்திருப்பது கண்டு ஆச்சரியப்படுகின்றோம்.

நூலகத்திறப்பு விழாவை யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொது அமைப்புக்களோடு, யாழ்.நூலகக்குழு மற்றும் கட்டடத் திணைக்களம் போன்றனவும் எதிர்த்ததன் காரணம்- நூலகம் திறப்பதற்கு எதிர்த்தோ அல்லது நூலகம் தேவையில்லை என்பதோ அல்ல. நாங்கள் எல்லோரும் எதிர்பார்ப்பது முழுமை நிறைந்த நூலகத்தைத்தான் என்பதை ஆனந்த சங்கரி புரிந்துகொள்ளவேண்டும். சங்கரியின் அறிக்கையையிட்டுக் கொதிப்படைந்துள்ள மக்கள் முன் இனி-எப்படி முகங்கொடுக்கப் போகிறார் என்பதே எமக்கு இப்போது எழுந்துள்ள கேள்வியாகும் - இவ்வாறு அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### வீட்டுக் கூரையிலிருந்து தவறி வீழ்ந்து காயம்

வீட்டிற்குச் சீற் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த உரும்பிராய் வாசி ஒருவர் தவறிவீழ்ந்து காயமடைந்தார்.

கடந்த 14 ஆம் திகதி காலை உரும்பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் சிவலிங்கம் மாயாண்டி (வயது 31) என்பவரே காயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, நெல்லிக்காய் பறிக்க மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்ததில் படுகாயமடைந் சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி இடம்பெறற மேற்படி சம்பவத்தில் மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பீற்றர் தேவதாசன் (வயது 44) என்பவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (60)

### விபத்தில் காயம்

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ - மோட்டார் சைக்கில் விபத்தில், மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் மதியம் இடம் பெற்ற மேற்படி சம்பவதில் வேலணையைச் சேர்ந்த செல்வராசா சிறிதரன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (60)

### அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் யாழ்.மாவட்டச் செயலாளர் அமரர் சிவகுரு சிவபாலனின் 45 ஆவது நாள் நினைவு தின அஞ்சலிக் கூட்டம் இன்று பி.ப 3.00 மணிக்கு பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

### சமாதானப் பிரார்த்தனை ஆலோசனைக் கூட்டம்

தென்னிலங்கையிலிருந்து வரவுள்ள சர்வமதக்குழு சமாதானப் பிரார்த்தனை ஒன்றை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடத்தவுள்ளது.

இந்தப் பிரார்த்தனைகள் தொடர்பாக, யாழ்.பொது அமைப்புகளின் ஒன்றியத்தால் - நாளை பிற்பகல் 4 மணிக்கு அரசசார்பற்ற இணைய அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

# பேர்ளின் பேச்சு, அகாஷி விவகாரம்; சந்திரிகா – ரணில் பேச்சில் ஆராய்வு!

பேர்ளினில் நடந்து முடிந்த ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

கடந்த வெள்ளியன்று இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கச் சென்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, பேர்ளினில் இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்தும், ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியை இலங்கையின் வெளிவிவகார ஆலோசகராக அரசாங்கம் நியமித்திருப்பதாக ஜனாதிபதி எழுப்பிய கேள்வி என்பன குறித்துப் பிரதமர் ரணில விக்கிரமசிங்க விரிவான விளககங்களை அளித்ததாகத் தெரியவருகின்றது.

இதன்போது , அகாஷியைத் தாம ஒருபோதும் வெளிவிவகார ஆலோசகராக நியமிப்பதற்கு ஆலோசனை செய்யவில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- ஜனாதிபதி சந்திரிகாவிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.


அத்துடன், அமைச்சா மிலிந்த மொறகொட அமெரிக்காவின் சார்பாக செயற்படுவது குறித்தும் ஜனாதிபதி அவரிடம் விளக்கம் கோரியதாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம், நெடுந்தீவுச் சம்பவத்தின் போது, தமது உத்தரவை நிறைவேற்றாது இருந்தமை குறித்து ஜனாதிபதி சந்திரிகா கேள்வி எழுப்பி இருநதார். இதற்குப் பதிலளித்த திலக் மாரபபன, தனக்கு எந்த உத்தரவுகளும் கிடைக்கவில்லை என்றும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியதாகத் தெரியவருகிறது. (01)

# இந்திய விமானப்படைத் தளபதி ஜனாதிபதியுடனும் சந்திப்பு

கொழும்பு வந்துள்ள இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் எஸ்.கிருஷ்ணசாமி, கடந்த வெள்ளியன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முப்படைத் தளபதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். நேற்றுமுன்தினம் அவர் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேசியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது இந்தியத் தூதுவர் நிருபம் சென், இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோரும் உடனிருந்தனர்.



மானிப்பாயில் பெண் போராளிகள் மீதான படையினரின் தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சியில் தமிழர் எழுச்சிப் பேரவையினால் நேற்றுமுன்தினம் நடாத்தப்பட்ட கண்டனப் பேரணியின் மேலும் சில காட்சிகளைப் படங்களில் காணலாம்.

# பாடசாலையிலிருந்து இடை விலகிய 300 பேருக்கு முகாமைத்துவப் பயிற்சி

## யாழ். கல்வி வலயம் நடவடிக்கை

யாழ்ப்பாண கல்விவலய முறைசாராக் கல்விப்பிரிவினால், பாடசாலையிலிருந்து இடைவிலகிய முந்நூறு பேருக்கு முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கான விணணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். கல்வி வலயப் பிரிவிலுள்ள நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து, தலா நூறுபேர் இந்தப் பயிற்சி வகுப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடைபெறவுள்ள இந்தப் பயிர்சிநெறிக்கு, பாடசாலையை விட்டு விலகிய 18 வயது முதல் 25 வயது வரையான வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூன்று மாதகாலம் நடைபெறவிருக்கும் இந்தப் பயிற்சியைப் பெற விரும்புவோர் - சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பதாக வலயக் கல்விப் பணிமனைக்கு, நேரடியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு - வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு - இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருப்பமும், தகைமையும் உடையவர்கள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக - யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# முறிவு, நெரிவு வைத்தியசேவை மீண்டும் இயங்க ஆரம்பித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுமார் பல வருடங்களின் பின் முறிவு, நெரிவு வைத்தியசேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முனனர் தனி ஒரு பிரிவாக இயங்கிய முறிவு, நெரிவு சிகிச்சைப் பிரிவு, பின்னர் முறிவு நெரிவு வைத்திய நிபுணர் நியமிக்கப்படாமையால் செயலிழந்திருந்தது.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் விசேட வைத்திய நிபுணர் இன்றி, சாதாரண வைத்தியர்களே சிகிச்சை அளித்து வந்தனர்.

முறிவு, நெரிவு வைத்திய நிபுணர் கே.உமாபதி நியமிக்கப்பட்டதை அடுத்து இந்தப் பிரிவு தனித்து இயங்க ஆரம்பித்துள்ளது.

வாரத்தில் திங்கள், புதன் ஆகிய தினங்களில் வெளிநோயாளாகளுக்கான கிளினிக் நடைபெற்று வருகின்றன. ஏனைய தினங்களில் விடுதியில் தங்கி இருப்பவர்களுக்கும், சத்திரசிகிச்சைப் பிரிவில் உள்ளவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவையில், இரு தினங்களில் மட்டும் 53 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ச)

## யாழ்.பல்கலைக்கழகத்தில்

# திட்டமிடல் துறையில் புதிய கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் திட்டமிடற துறையிலும் புதிய கறகை நெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நான்கு வருடங்களைக் கொணட இப்புதிய கற்கை நெறியை இந்த ஆண்டு முதல் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் ஆரம்பித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழமும், யாழ்.பல்கலைக்கழகமும் கடந்த 1997 ஆம் ஆண்டு மேற்கொண்ட நட்புறவு செயற்திட்டத்தின் ஒரு அம்சமாகவே இப் புதிய கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 22

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

நோய்களுக்கு எளிதில் ஆளாகத்தக்க நீரிழிவு நோயாளிகள், இதனால் பெரும் அவலத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அப்பியாசத்திற்காக வீதியோரத்தால் நடக்கின்ற நீரிழிவு நோயாளிகளை, வீதியில் திரியும் கட்டாக்காலி நாய்கள் கடித்துவிடுகின்றன. பொறுப்பற்றமுறையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளால் செலுத்தப்படும் வாகனங்கள் இந்த நோயாளிகள் மேல் மோதிவிடுகின்றன. இத்துர்ப்பாக்கியமான நிகழ்வுகளினால், காயமுற்ற பல நீரிழிவு நோயாளிகள், மாறாப் புண்களுக்கு ஆளாகிக் கால்கள் அகற்றப்பட்டு, வாழநாள் முழுவதையும் நொண்டிகளாகவும், உறவினர்களுக்குச் சுமையாகவும், உடைந்த மனமுடையவர்களாகவும், துக்கவாழ்வு வாழ நிர்பபந்திக்கப்படுகின்றனர். இந்தநிலை எந்தவேளையிலும் எவருக்கும் ஏற்படலாம் என்ற அச்சம் எங்கும் நிலவுகிறது.

நாய் வளர்ப்பது எப்படி? என்பதை நாய் வளர்ப்போரும், நாய் வளர்ப்பை அனுமதிப்பது எப்படி என்பதை, சுகாதாரத்தை மேம்படுத்தவேண்டிய உள்ளூராட்சி மன்றங்களும் தெளிவாக அறிந்து கொள்ளாததும், வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் உலாவுக்கும், நாய்களால் பெருமளவு (மோட்டார் சைக்கிள்) விபத்துக்கள் ஏற்படுவதற்கும் பிரதான காரணங்களாகும்.

இவ்விருதரப்பினருக்கும் அவரவரது கடமைகளை உணரவைத்தால், நாய்க்கடியினால் - விலங்கு விசர் ஏற்படல், விபத்துக்கள் ஏற்படல் என்பன தடுக்கப்படலாம். அத்துடன், நாய் மலத்துடன் வெளியேறும் குடற்புழு முட்டைகள் நிலத்தில் வீழ்ந்த பழங்களில் ஒட்டுகின்றன. அத்தகைய பழங்களைக் கழுவாது உண்ணும்போது மனிதரின் உணவுக்கால் வாயை அடைந்து, அங்கு பொரித்துப் புழுக்களாகி (VSERAL MIGRANS) பல்வேறு உள் உறுப்புக்களையும் குடைந்து செல்வதால் ஏற்படும் பயங்கர உபாதைகள், முட்டைகள் நிலத்திலேயே பொரித்துப் புழுக்களாகி, மனிதரின் தோலில் தொற்றி, கடுமையான சொறிவு, எரிவு என்பனவற்றை ஏற்படுத்துகின்ற தோலுழும் புழுக்கள் (CUTANIOUS MIGRANS) என்பனவற்றின் உபாதைகள் போன்றவை ஏற்படாமலும் தடுக்கலாம்.

எனவே, முறையான நாய் வளர்ப்பு முறைபற்றிக் குறிப்பிடுவது நீரிழிவு நோயாளிகளுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதால் அதையும் குறிப்பிடவேண்டியுள்ளது.

நாய் வளர்ப்போர் நாய்க்குட்டிக்கு மிருக வைத்தியர் சிபார்சு செய்யும் குடற்புழு நீக்க மருந்தை, ஒவ்வொரு 3 மாதத்துக்கு ஒரு தடவையும் 3 வயதைப் பூர்த்தி செய்ததிலிருந்து சிபார்சு செய்யப்படும் குடற்புழு நீக்க மருந்தை உரிய அளவில் கொடுக்கவேண்டும். ('கொம்பான்ற்றின்' மெபெண்டசோல் என்பவற்றை வழமையாகச் சிபார்சு செய்கிறார்கள்.)

**ARV** எனப்படும் விலங்கு விசர் தடுப்பு ஊசியும், **PARVO** எனப்படும் பாவோ வைரசு நோய்த்தடுப்பு ஊசியும், **DHL** எனப்படும் முக்கூட்டுத் தடுப்பு ஊசியும் ('டிஸ்ரெம்பர்', ஈரல் அழற்சி, லெபரோஸ் பைரோசிஸ்) மிருக வைத்தியரால் விதந்துரைக்கப்படும் கால இடைவெளி ஒவ்வொன்றுக்குமாக நாயின் வாழ்நாள் முழுவதும் ஏற்றுவிக்க வேண்டும்.

நாய் வளர்க்கப்படும் உள்ளூராட்சி மன்றத்திடம், நாயின் விபரங்களைத் தெரிவித்து, உரிய கட்டணம் செலுத்தி, நாய் உரிமம் பெறவேண்டும். சுகாதாரப் பரிசோதகர் உரிமம் பெறாத நாய்கள் வளர்க்கப்படுகின்றனவா? எனப் பரிசோதித்து உரிமம் பெறாது நாய் வளர்ப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, வரும்போது உரிமம் பெற்ற நாய், என்பதைப் புலப்படுத்துவதற்காக நாயின் கழுத்தில் உரிமத்தகட்டைக் கட்டிவிடவேண்டும். நாயை வளர்ப்பிடத்தின் எல்லைக்கு வெளியே செல்ல அனுமதித்தல் ஆகாது.

*(தொடரும்)*




நமது ஈழநாடு வழங்கும்





உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: சுசுகி றேடர்ஸ்

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

59, 61 கன்னாதிட்டிவீதி, யாழ்ப்பாணம்

TVS மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



2. SAMUDRA TRADES LTD

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும், இயந்திரங்கள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்திரா மல்ரிகோட்யாட்



531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------
வயது: ------------------------
முகவரி: ------------------------
------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# A-9 னெ நீளும் நினைவுகள்

பகுதி பத்தொன்பது

கிளிநகர்தனைச் சொந்தங்கள் சூழ்ந்தனர்.
கிண்டிக்கிளறி மிதிவெடி தூர்த்தனர்.
விளை நிலங்களைப் புற்றாக மூடிய
மண்ணரண்களை வெட்டி அகற்றினர்.
பழைய புற்றுக்குள் பாம்புகள் சேமித்த
பண்டம் யாவையும் மீட்டு எடுத்தனர்.
அழகிழந்து கிடந்த நகர்முக
அழுக்கைத் தங்கள் வியர்வையால் ஒற்றினர்.

முருகன் கோவிலை மூடிய சூரர்கள்
போன மூர்த்தம்... மணியொலி கேட்டது!
அருகருகே இருந்த கடைகண்ணி
அழகுடுத்தது! சன நடமாட்டமும்
பெருக மீண்டும் நெரிசல் மிகுந்தது!
பேச்சிழந்து உறைந்த A~9 தெரு
சுறுசுறுப்பாய் இயங்கத் தொடங்கிற்று
தொடர் பயணம் நிகழ உதவிற்று!

கண்டி வீதிப் பயணமோ மாங்குளங்
கடக்கையில் காட்டினூடாய் நகர்ந்தது.
நின்ற படைகள் துயரை விதைத்தன.
நில புலங்களில் கண்ணிகள் வைத்தன.
கன்னியாஸ்திரி இல்லமும், கோவிலும்,
கல்விக் கூடமும் சேர்ந்து ஒருபெரும்
முன்னரணுடன் கூடிய போர்த்தளம்
முறைத்திருந்தது A~9 வீதிக்கு!

- ஜெயங்கொண்டான்

# இலக்கியச் சோலை

## முயல்வில் ஒளிர்தலானது...



நீறாய்க் கிடந்தது சாம்பல்
என் நெஞ்சுறுத்திற்று
நிகழப்போகின்ற என் இறப்புணர்த்தி.
நாளைய மயானத்தில்
நான் தகனித்தலின் பின்னான
என் உரு
வேறெங்கிருந்துமில்லை
வெறும் விறகுத்துண்டத்திலிருந்து
இரண்டின் முடிவும்
ஒன்றே தானா?
வரண்ட உள்ளத்துள்
வளரும் ஞான ஊற்றினைக்
கவனமாய் மறைப்பேன்.
வாழ்ந்தாக வேண்டும்
கனவுடைப் பெண்ணென.
வெறுப்பில்லை
விருப்புந்தானில்லை.
நடுவே நிலையென
நிதானித்துளது ஆத்மா.
கறுப்பில்லை
வெண்மையுந்தானில்லை.
இடையே இடறும்
சாம்பலின் வண்ணம்.
மெல்லக் குனிந்து
ஊதுங்குழலால்
சாம்பல் துருத்தினேன்
ஒளிர்ந்தது விறகு.
கூடவே உள்ளாத்மாவும்.
முயல்வில் ஒளிரும் மரணம்
எனும் உண்மை தெளிந்து.

சாரங்கா

## வெளிகளும் மூலைகளும்...



சிரிப்புத்தவழப்
படியேறும் புதியமுகம்
மகிழ்ச்சிதருகிறது.
கேளாமலே சிரமமுணர்ந்து
உதவ முன்வரும் கைகள்
நம்பிக்கை தருகின்றன.
துயர வதைப்பில் உயிரொடுங்கி
அமர்கையில்
பார்வையால் புரிதல்காட்டி
மௌனமாய் அருகமரும் துணை
தென்பூட்டுகிறது.
அழுகை தொண்டையிலடைக்க
விழிபனித்துக் தனிகையில்
ஆதரவாய்க் கையை அழுத்தும்
சிநேகம் இதமாயிருக்கிறது.
உரிமையாய் மடியமர்ந்து
வெள்ளைச் சிரிப்புடன்
நாடி தொடும் பிஞ்சுக்கை
மனசை நிறைக்கிறது.
ஒரு விசேஷமான செயலூடு
அடிமனப் பிரியத்தை
வெளிக்காட்டும்
இனிய உறவு
வாழ்தலில் ஆர்வம் தருகிறது!
கூடவே இருப்பினும் மனதுக்குள் கோடிழுத்து
தனதென்றும் உனதென்றும்
வகைபிரித்தும் உறவு மட்டும்
அச்சுறுத்துகிறது எப்போதும்...

ந.சத்தியபாலன்

# கிழக்கும் மேற்கும்

## மாமன்னன் சங்கிலி - மாவீரன் யூலியஸ் ஸீஸர்



கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்தான் சரவணமுத்து முருகையா ஆவார். இவர் முருகு என்ற புனை பெயரில் நீண்டகாலமாக கவிதை எழுதிவருகிறார். இவரது கவிதைகள் எமது சமூகத்தின் வரலாற்றை விளக்கிச் சொல்லும் வலுமிக்கவை.

கிழக்கினில் அன்று வாழ்ந்த மன்னன்
இன்னுயிர் நண்பனின் துரோகச் செயலால்



இழப்பதற்கரிதாம் தனது உயிரையும்
கிடைப்பதற்கரிதாம் அரசையும் இழந்தான்!
மேற்கினில் அன்று வாழ்ந்த மாவீரன்
போற்றும்தன் நண்பரின் வஞ்சனைச் செயலால்
ஓதுதற்கரிதாம் தனது உயிரையும்
தேடுதற்கரிதாம் நாட்டையும் இழந்தான்!!

யாழ்ப்பாண அரசின் தலைநகர் நல்லூர்!
பார்போற்ற அரசாண்ட பராச சிங்கனின்
இளைய மகனாம் சங்கிலி - தன் அண்ணனாம்
பரநிருப சிங்கனின் உரிமையை மீறியே
ஏற்றுக் கொண்டான் தந்தையின் ஆட்சியை!
ஏற்றம் பெற்றன தமிழுடன் சிவநெறி!
பறங்கியர் மன்னாரில் மதமாற்றம் செய்வதை
அறிந்ததும் சங்கிலி மன்னார் விரைந்தான்!
மதம் மாறினோரை மிரட்டியும்; அங்கு
மதம் மாற்றினோரை விரட்டியும் மீண்டான்!
வெல்லுதல் அரிதென உணர்ந்த பறங்கியர்
நல்லவர் போலவே மன்னனை நாடித் தம்
கோவில் அமைத்திட அனுமதி கேட்டனர்!
வேண்டிய அனுமதி மறுக்கப்பட்டதால் ...
அனுமதி கேட்டனர் வர்த்தகம் செய்திட!!
அதனையும் மன்னன் மறுத்தான் - ஆயினும்
பரநிருபசிங்கன் பரிந்துரை செய்யவே....
அனுமதி வழங்கினான் வர்த்தகம் செய்யவே!
மீண்டும் பறங்கியர் வீடுகள் அமைத்திட
அனுமதி பெற்றுக் கோட்டை அமைத்திட்ட
வஞ்சனைச் செயலினைக் கண்டதும் சங்கிலி
வெஞ்சினம் மிகுந்து வெஞ்சமர் புரிந்தான்!
பறங்கிக் கோட்டையை மண்மேடாக்கினான்!
பறங்கிப் படைகளும் பஞ்சாய்ப் பறந்தன!
சங்கிலி மன்னனின் நண்பனாய் விளங்கிப்பின்
சங்கிலிக் கெதிராகப் பறங்கிக்குத் துணைநின்ற
காக்கை வன்னியிடம் ஊர்காவற்துறைக்குப்
பறங்கியர் பறந்தனர் புகலிடம் வேண்டியே!
நல்லூரில் தமக்குற்ற இழப்புக்குப் பதிலீட்டை
நஞ்சன் வன்னியிடம் பறங்கியர் நெருக்கினர்!
குலப்பகை தீர்த்திட வெளிப்பகை அழைத்திட



முருகு

துணிந்த அமைச்சராம் அப்பா முதலியும்
பரநிருப சிங்கனும் காக்கை வன்னியனும்
பறங்கியருடன் கலந்து சதித்திட்டம் தீட்டினர்!
திட்டப்படியே பறங்கிப் படைகள்
நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசலில்
அணிசெய்து நின்றிட - அவற்றின் நடுவே
மாற்று வேடத்தில் காக்கையன் நின்றான்!
படைவந்த செய்தியை அறிந்ததும் சங்கிலிதன்
படைகள் தொடர்ந்திட வாசலை அடைந்தான்!
சதிகாரனின் சூழ்ச்சியால் மன்னனின் தளபதி
சமர்களத் திருந்து அகற்றப்பட்டான்!

(வரும் அடுத்த வாரமும்)

# மூலையும் சோலையும்

## கலாநிதி.சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

நான் அரையில் கட்டியிருந்த துணி (சட்டைபோடும் வழக்கம் தமிழ்ப் பாடசாலைகளிலே மிகக்



குறைவு. நான் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே எட்டாம் வகுப்புப் (J.S.C.) படிக்கும் காலத்தில்தான் சட்டை அணியத் தொடங்கினேன்.) அவிழ்ந்து, அஸ்தினாபுரத்து அவையிலே பாஞ்சாலி நிலைக்கு உள்ளானேன். அப்பொழுதும் ஆசிரியர் விட்டாரா? 'கடட்டா வேட்டியை' என்று பிருஷ்டத்தில் மற்றொரு அடியும் போட்டார். அன்று பாடசாலை விடும்வரை அழுது கொண்டே இருந்தேன். அடியிலும் அதிகமாக, அரைத்துண்டு அவிழ்ந்த அவமானந்தான் என்னை வாட்டி எடுத்தது.

வீட்டிற்கும் அழுதுகொண்டே சென்றேன். அம்மாவைத் தவிர வேறு எவரும் என்னில் இரக்கம் காட்டவில்லை. கண்ணீர் மல்க, என் காயத்திற்கு நல்லெண்ணெய் பூசியதோடு அவர் மௌனமாகிவிட்டார். என் சிற்றப்பரோ சந்தர்ப்பம் அறியாது சிரித்தபடி "உன்னை வாத்தியார் உந்த அளவோடை விட்டிருக்கக்கூடாது... தோலை உரிச்சிருக்க வேணும்." என்றாரே பார்க்கலாம். ஆனால், என்னால் அவரை என்ன செய்யமுடியும்?

அன்று பின்னேரம் முழுவதும், வளவில் நின்ற தென்னை மரங்களுக்குப் பூவரசம் தடியால் சவுளடி கொடுத்து ஓரளவு மனம் ஆறினேன்.

பாடசாலையின் ஐந்தாம் வகுப்பு ஆசிரியராய் எங்களுக்கு ஆங்கிலம், கணிதம், சமயம், தமிழ் என்று அனைத்துப் பாடங்களையும் கற்பித்தவர் செ.சோமஸ்கந்தர் என்பவர். வகுப்பிலே ஆணும் பெண்ணுமாக ஏழே மாணவர். ஆங்கில வினாக்களை 'காபன்' கொண்டு பிரதி பண்ணி வழங்கிப் பயிற்சிகள் செய்வித்தும், மிகவும் திறம்படப் பாடங்களைக் கற்பித்தும் எம்மை, இந்துக் கல்லூரி மாணவருக்குச் சம மாணவராக உருவாக்கியவர் இவ்வுத்தமர்.

ஆனால், இவரும் 'அடிபோல அண்ணன் தம்பியும் உதவார்' எனற பழமொழியில் நம்பிக்கை உடையவரே. இவர் பிரம்பிலும் தமது இடது கையையே பெரிதும் நம்பியிருந்தார். மனிசன், எதிர்பாராத நேரத்தில் விசுக்கும் விசுக்கில் எங்கள் குருத்துக் கன்னங்கள் பழுத்தன; சிவந்தன. அவரின் இடதுகை விரல்களின் பதிவுச் சின்னங்களாயின.

அக்காலத்தில் விரைவில் மனப்பாடம் பண்ணுபவனாகவும், இனிய குரலில் (ஓரளவு ஆசிரியர் சொல்லித் தருவது போல்.) பாடக் கூடியவனாகவும் இருந்ததும் எனக்கு வினையாய்ப் போயிற்று. என் சக பாடியான முருகையா (காலமாகிவிட்டார்.) என்னிலும் திறமையாகப் பாடினாலும் (இருவரும் கூடிப் பிரார்த்தனைப் பாடல்களை வழிபாடுகள், சமய வைபவங்களின் போது பாடி, சக மாணவரைத் தொடர்ந்து பாடவைப்போம்) அவரால் விரைந்து மனனம் செய்ய முடியாது. இந்நிலையில் சரஸ்வதி பூசையில் நான் பாட வேண்டும் என்று சரஸ்வதி அந்தாதியிலிருந்து, ஆசிரியர் சோமஸ்கந்தர் இருபது பாடல்களைத் தெரிந்து தந்தார்.

(தொடரும்)

# கூடு

## சிறுகதை

கந்தசாமி வீட்டைக் காட்டிய போது உடனே பிடித்துவிட்டது. வளவு எல்லாம் அடக்கமாக இருந்தது. வீடு கட்டி முடித்து பத்து வருடங்களுக்கு மேல் இருக்கும் போல் தோற்றமளித்தது. வர்ணங்கள் பூச்சுக்களின்றி சுவர்கள் நிர்வாணமாக நிற்க, இடையிடையே துப்பாக்கிச் சன்னங்கள் அதில் குழி பறித்திருந்தன.

அடக்கமான ''சின்னக் கிணறு'' அதனைச் சுற்றி வாழை, கமுகு, செவ்விளநீர் மரங்கன்றுகளெல்லாம் பசுமையாக இருந்தன. படலையிலிருந்து வீடு வரைக்கும் இருமருங்கிலும் குறோட்டன் செடிகள் அழகாக நின்றன. கந்தசாமி தவறாது தண்ணீர் பாய்ச்சுவது அவற்றைப் பார்க்கும்போது தெரிந்தது. வீட்டின் பின் பக்கம் வேலியோடு ஒட்டியபடி இருந்தது. அதற்கு அப்பால் வெளியாகக் காணி தெரிய, அதில் புகையிலைக் கன்றுகள் வெட்டப்பட்டு அடிமரங்கள் மொட்டையாகக் கிடந்தன. இடதுபக்க வேலியோடு ஒழுங்கை போனது.

வீட்டு வாசற்கதவினைத் திறநது கந்தசாமி உள்ளே கூட்டிச்சென்றான். முன் சிறிய ஹோல், அதனை ஒட்டிய பெரிய நீண்டஹோல், அதோடு இணைந்த இரண்டு பெரிய அறைகள், அப்பால் குசினி என்று...

இந்த வீடு போதும். திருப்தியாக இருந்தது. என் கையைப் பிடித்தபடி என்னோடு ஒட்டி வந்த மகன் பேசாமல் வந்தான்.

''என்னப்பு வீடு பிடிச்சிருக்கோ?''

''நல்ல வீடு அப்பா'' மகன் சிரித்தபடி கூறினான். கந்தசாமியும் அதில் கலந்தான்.

''பிறகென்ன மகனுக்குப் பிடிச்சுப்போச்சு எப்ப வரப்போறியள்?''

''வாறது ஒண்டும் பிரச்சினை இல்லை, அதுக்கு முன்னம் ஒருக்கா கிணத்தைக் கலக்கி இறைத்து வீட்டைக் கழுவிவிட வேண்டும்.''

''உதுக்கேன் யோசிப்பான், எல்லாம் நான் செய்து போட்டு வந்து சொல்லுறன், பிறகு நீங்க வந்து இருங்கோ.''

கந்தசாமி ஆனந்தமாகக் கூறினான். அவன் எனது தூரத்து உறவினன்தான், நாங்கள் இடம் பெயர்ந்து வன்னிக்குப்போய், ஏ-9 பாதையால் திரும்பிவந்து, பழைய வாடகை வீட்டுக்குப் போகமுடியாமல் இருந்தபோது கந்தசாமிதான் அகப்பட்டான்.

''அண்ணை நீங்க முந்தி இருந்த வீட்டுப் பக்கமெல்லாம் இன்னும் ஆக்களை விடேல்ல, கொஞ்சம் பொறுமையாய் இருங்கோ, நானெல்லோ உங்களுக்கு வீடு எடுத்துத்தாறன்''

அவன் எனக்குச் சொன்ன மாதிரியே ஒரு நல்ல வீட்டைத் தெரிவுசெய்து விட்டான்.

அறைகளை அவன் காட்டியபடி வெளியேவர திறந் திருந்த ஜன்னலூடாக அந்தச் சிறுகுருவி பறந்துவந்து உள்ளே வட்டமிட்டது. தலையை மேலும் கீழுமாக ஆட்டியபடி, இறக்கைகளை படபடவென அடித்துக் கொண்டு, அது பறந்தவிதம் ஏதோ ஒன்றைத் தேடுவதுபோல் தெரிந்தது. அதனது நீண்டு, வளைந்த அலகு அதற்கு மேலும் அழகைக் கொடுத்தது.

என் மகன் அச்சிறு குருவியைக் கண்டு கூச்சலிட்டுக் கத்தினான்.

''அப்பா, சின்னக். குருவியப்பா, சின்னக் குருவியப்பா'' அவன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. என் இடக்கையினை இறுகப் பிடித்தபடி எழும்பித் துள்ளினான். குருவி இப்போது பெரிய ஹோலில் பல்ப் போடுவதற்காகத் தொங்கிக் கொண்டிருந்த வயரின் நுனியில் தொங்கியபடி எங்களைப் பார்த்துவிட்டு "பட்டென" வெளியே பறந்துபோனது.

"குருவி போட்டுதப்பா"

பிரதான வீதியில் இராணுவ வாகனம் ஒன்று விரைந்து சென்றது.

எனது வாழ்க்கையில் இது எத்தனையாவது வீடு... அப்போது வவுனியாவில் தொடங்கிய இன மோதலில் - அம்மா என்னை வயிற்றில் சுமந்துகொண்டு உயிரைக் காப்பாற்ற ஓடினார். அந்த ஓட்டம் தொடங்கி, நான் பிறந்து-மன்னார், திருகோணமலை, கொழும்பு எனத் தொடர்ந்து யாழ்ப்பாணம் திரும்பிவந்து, வளர்ந்து குடும்ப அங்கத்தவர் தொகை பெரிதானபோது, மறுபடியும் ஓடவேண்டிய நிலைமை வந்தது. ஆறு வருஷமாக மருதனாமடச் சந்திக்குப் பக்கத்தில்.... இருந்த வீட்டில் இருந்தபோது,

தொடர்ந்து குடியிருக்கும், குடியிருப்பாளருக்கே வீடு சொந்தமாகும் என்ற கதை அடிபட்டபோது, வீட்டுக்காரரும், அவரின் உதவியாட்களும் செய்த வேலையால் எங்கள் குடும்பம் வலுக்கட்டாயமாய் வெளியேற்றப்பட்டது.

வீட்டைச் சுற்றிநின்ற மா, பலா, நாவல் மரங்களை வெட்டி, வேரோடு பிடுங்கி எறிந்து வீட்டைச் சுற்றிய வளவு முழுவதையும் மெஷினால் உழுதுவிட்டு நாங்கள் நடப்பதற்கே பாதையில்லாமல்...

பிறகு எப்படி அங்கிருக்க முடியும்? பிறகு, வழமையான கதைதான். மூட்டை, முடிச்சுக்களுடன் வண்டியில் கிளம்பி சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் போகும் வீதியில் இடதுபக்கத்தில் அமைந்த, அந்தப் பெரிய வீடு, ஒரு நல்ல மனிதரால் எங்களுக்குக் கிடைத்தது. பெரிய வாகைமரம் பிரதான வீதிக்கும் வீட்டுக்கும் இடையில் நின்றது. இங்கும் முன்பிருந்த வீடுபோல, பின்பக்கம் தோட்டக்காணிதான் பரந்து கிடந்தது.

நல்ல மெல்லிய காற்று எந்நேரமும் வீசிக்கொண்டிருக்கும். வீட்டின் மொட்டை மாடியில் நின்று நிலவை வடிவாகப் பார்க்கலாம். அண்ணா கல்யாணம் முடித்து அண்ணியோடு அங்கு நின்று படமெடுத்தது இப்போதும் நினைவில்....

வீட்டில் எல்லோருமே சந்தோஷமாக இருந்தார்கள். எங்களுக்கும் ஓடித்திரிந்து விளையாட பெரிய இடமிருந்தது.

வீட்டின் சொந்தக்காரர் கொழும்பில் இருந்தமையால் கொஞ்சக் காலத்திற்கு நிம்மதியாக இருக்கலாம் என நாங்கள் நினைத்தோம்.

ஆனால், அப்படியிருக்க முடியவில்லை. இனப்பிரச்சினையைக் காரணம் காட்டி, பக்கத்துத் துணைக் கண்டத்திலிருந்து "அமைதி காக்க வந்தவர்களால் மறுபடியும் ஓட வேண்டியநிலை... மீண்டும் ஓடினோம். மீண்டும் அந்த வீட்டில் வந்திருக்க முடியவில்லை. அது தரைமட்டமாக இருந்தது. எங்கள் உடமைகள் எல்லாம் களவு போய் விட்டன.

பிறகென்ன, மீண்டும் வீடு தேடும் படலம். இந்தப் பிரச்சினையிலும் முன்பிருந்த ஒவ்வொரு வீட்டிலும் அண்ணனுக்கும், அக்காவுக்கும் கலியாணம் நடந்தது. பின் கடைசியாக இருந்த வீட்டில் எனக்குத் திருமணம் நடந்து, இடம்பெயர்வோடு மகன் பிறந்தது எல்லாமே வரலாறான விடயங்கள்.

இப்போது நான் மட்டும் தனியாக எனது சகோதரக் குருவிகளைப் பிரிந்து, அப்பா, அம்மாவை இழந்து, எனக்கு இப்போது இருக்க வீடு...

''என்ன சரியான யோசனை? போக வேண்டியதுதானே?'' கந்தசாமி அமைதியைக் குலைத்தான். நாங்கள் வெளிக்கிட ஆயத்தமாக மகனைப் பார்த்தேன். அவனைக் காணவில்லை. தேடிக்கொண்டு வீட்டின் உள்ளே போனால் -

அவன் அந்தக் குருவியை எதிர் பார்த்துக் கொண்டு இருப்பது தெரிந்தது.

"அப்பு வாங்கோ போவம், பிறகு வந்து குருவியைப் பார்ப்பம்."

மகனுடன் திரும்பிவரும்போது கந்தசாமி கேட்டான்.

"என்னண்ணை நானும் பார்க்கிறன் கடுமையாய் யோசித்துக் கொண்டே வாறியள்."

"ஒண்டுமில்லை கந்தசாமி. இப்படி எத்தனை நாளைக்கு ஓடித்திரியப் போறம்." ஆக்களோடு சேர்ந்திருக்கிறது என்றாலும் ஏதோ ஒரு சிக்கல் வந்து விடும்...ம்.

"எப்படித்தான் எங்களுக்குச் சொந்த வீட்டிலை நிம்மதியாய் இருக்கப்போறோமோ?"

"அண்ணை உங்களுக்குச் சீதனமாய் வீடு தரேல்லையோ?"

"இல்லை, கந்தசாமி அவையளும் இடம்பெயர்ந்த குடும்பம் நாங்கள் வீடு கேட்கேல்லை."

"கஷ்டம்தான், ஒருநாளைக்கு நல்ல முடிவு வரத்தானே வேணும்." கந்தசாமி என்னை ஆறுதல்படுத்தினான்.

"மற்றது வீட்டுக்குக் குடிவந்த பிறகு எந்தப் பிரச்சினையும் வராது தானே?''

"வீட்டுக்காரர் கொழும்பிலை வெளியால போக நிற்கினம். இங்கை வராயினம். நீங்க யோசிக்காதேங்கோ"

நான் தங்கியிருக்கும் வீடு வர கந்தசாமி பிரிந்தான்.

ஒரு நல்ல நாளில் புதிய வீடு வந்து சேர்ந்தோம். கந்தசாமி சொன்ன மாதிரி எல்லாவற்றையும் செய்து முடித்திருந்தான். நாங்கள் கொண்டுவந்த சாமான்களை ஒழுங்குபடுத்தி வீட்டிலும் சில திருத்த வேலைகள் செய்து, மனது இயல்பாக வீட்டோடு ஒன்றிப்போகச் சில நாட்கள் பிடித்தன.

மனைவியின் கைராசியில் வீடு புதுவித மெருகுடன் காட்சி கொடுத்தது. நல்ல இன எலும்பிச்சங்கன்று நடுவதற்கு, வாங்கிவரும்படி கூறியவளைப் பார்க்க எனக்கு சிரிப்பு வந்தது.

"என்னப்பா இவ்வளவு அனுபவப்பட்டும் இந்தப் பழக்கம் போகேல்லையோ?"



"நான் என்ன செய்ய, மனசின் இயல்பான குணத்தை மாற்ற முடியுமோ? ஏதோ இருக்கிற வரைக்கும் எங்கட வீடு என்ற சந்தோஷத்தில வாழவேண்டியதுதான்."

ஒருநாள் அந்தச் சின்னக் குருவி வயறில் தொங்கியபடி எங்களைப் பார்த்தது.

"அப்பா நாங்கள் வந்திட்டம் எனத் தெரிஞ்சு எங்களப் பார்க்க வந்திருக்கு''

மகன் ஆனந்தத்துடன் துள்ளியபடி என் கையைப் பற்றி இழுத்து குசினியில் நின்ற தாயாரைக் கூப்பிட்டான்.

"அம்மா ஓடிவந்து குருவிப் பிள்ளையைப் பாருங்கோ"

மனைவியும் ஓடி வந்து அந்தச் சின்னக் குருவியைப் பார்த்தாள்.

"உதுக்கென்ன பேரம்மா?"

"உதை தேன்குருவியெண்டு சொல்லுவை."

"அப்பா உந்த வயிரில கூடு கட்டப் போகுதோ?"

"அப்பிடித்தான் இருக்கும்போல."

மகன் பாடசாலை போய்வந்து அதிக நேரத்தை இந்தக் குருவியோடு செலவிட்டான். குருவி இப்போது சின்னத் தும்புகள், பஞ்சுகள் சகிதம் வந்துபோனது. சரசரவென வந்து வயறின் அடியில் தொங்கிவிட்டு உடன் "விருட்டென" பறந்து போவதை மகனைப்போல நாங்களும் அதிசயித்துப் பார்த்தோம். அதன் வேகம், சுறுசுறுப்பு, கூடு கட்டும் திறன் எங்களை மலைக்க வைத்தது.

கூடு கட்டிமுடிய அது உள்ளே போய் தலையை மாத்திரம் வெளியே பார்வைக்குத் தெரிய, கழுத்துக்குக் கீழே கூட்டுக்குள் அமுங்கி மறைந்து கிடந்தது.

அந்தச் சிறிய கூடு வயறில் தொங்கியபோது, அது கீழே விழுந்து விடாதா என்ற பயமும் எங்களுக்குள் எழுந்தது.

"ஏனப்பா குருவி நெடுக கூட்டுக்குள்ள இருக்கு?"

"முட்டை இட்டிட்டுது போல குஞ்சு பொரிச்சு அடைகாக்குது."

மனைவி எங்களை பார்த்து கூறினாள்.

"அப்பா, அம்மா பார்த்தியளே

இரவு படுத்த பின்னர் மனைவி கேட்டாள்.

"என்னப்பா மறுபடியும் ஏதாவது..."

"ஒண்டும் நடவாது பேசாமல் படும்."

அந்த நேரத்தில் விசில் அடிப்பது போல் சிறு சத்தம் கேட்டது. நான் எழும்பிய கையோடு மனைவியும் மகனும் எழும்பிவிட்டார்கள். மறுபடியும் சத்தம் கேட்க மகன் துள்ளினான்.

"குஞ்சு பொரிச்சிட்டுது அப்பா, குஞ்சு பொரிச்சிட்டுது"

அதன் குஞ்சின் சத்தமா இப்படிக் கேட்கிறது?

கையில் விளக்கோடு மூவரும் நடுஹோலுக்கு வந்தோம். வயரில் தொங்கிக் கொண்டிருந்த கூட்டிலிருந்துதான் சத்தம் வந்தது.

சற்றுக் காதைத் துளைக்கும் விசிலடிக்கும் ஓசை கேட்டது. நகர்ந்து தொடர்ந்தும் குஞ்சின் சத்தம் கேட்டது. தாய்க்குருவி வெளியே போய் வந்தபடி இருக்கும். இதில் மாற்றமில்லை.

சில கிழமைகளில் குஞ்சு வளர்ந்து கூட்டின் வாசல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தபடி இருக்கத் தொடங்கியது. தாயைப்போல் அதன் அலகும் நீண்டிருந்தது. "சும்மா'' இராமல் அது விசில் சத்தம் போட்டபடி இருக்கும். தாய்க்குருவி வந்து இரை ஊட்டி விட்டுச் செல்லும். எல்லாம் வழமைபோல் நடந்து கொண்டிருந்தன.

ஒருநாள் காலை கூட்டிலிருந்து குஞ்சின் சத்தம் வரவில்லை மகன் பரபரத்தான்.

''அப்பா, குருவிக் குஞ்சு பறந்து போட்டுதோ?''

"கூட்டுக்குள்ள பதுங்கியிருக்கும் பாருங்கோ.''

"இல்லை அம்மா நான் அப்ப தொடங்கி பார்த்துக்கொண்டுதான் இருந்தனான். குஞ்சுச் சத்தம் கேக்கேல்ல.''

"என்னப்பா, நீங்களும் சின்னப் பிள்ளை மாதிரி நிக்கிறியள்''

"குஞ்சு தாயோட உலாத்தப் போட்டுது.''

நாங்கள் இந்த அமளியில் நிக்க, வெளியில் கந்தசாமியின் குரல் கேட்டது.

"என்ன கந்தசாமி கேற் அடியில நிண்டுகொண்டு, உள்ள வாருமன்.''

நான் கந்தசாமியை நெருங்க அவன் பதட்டமாக இருந்தான்.

"அ...ண்...ணை... கொழும்பில இருந்து கடிதம் வந்திருக்கு. வீட்டுக்காரர் வெளியால போறது இப்போதைக்குக் கஷ்ரமாம். அதால இங்க திரும்பி வருகினமாம்... என்னண்ணை செய்யிறது?''

நான் சலனமற்று கந்தசாமி சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். பக்கத்தில் மனைவி நின்றாள்.

"கடவுளே, என்னப்பா செய்யிறது?''

"அண்ணை நான் உப்பிடி வருவினமெண்டு நினைக்கேல்ல சரியான கஷ்ரத்தை உங்களுக்குக் கொடுத்திட்டன். அக்காவும் சுக

**சி.கதிர்காமநாதன்**

மில்லாத நேரத்தில, யோசியாதையுங்கோ நான் வேற வீடு பாக்கிறன்.''

அவன் மேலும் நிக்க முடியாமல் போய்விட்டான்.

இரவு நித்திரை வரவில்லை. மனைவியும் நித்திரை வராமல் புரண்டாள்.

"கடவுளே ஒரு ஐந்து மாதம் தன்னும் அலையாமல் கொள்ளாமல் இருந்தால் மனைவிக்கு எவ்வளவு நல்லது.'' விளக்கொளியில் மனைவியின் உப்பிய வயிறு தெரிந்தது. எனக்குப் பக்கத்தில் படுத்திருந்து மகன் என் கன்னத்தைத் தட்டித் திரும்பினான்.

"அப்பா அந்தத் தாய்க் குருவி தன்ர குஞ்சு பொரிச்சு வாறதுக்கு ஏன் தனியக் கூடு கட்டிக் கஷ்ரப்பட வேணும். வேற குருவிக் கூட்டில் போய் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கத் தெரியாதோ?''

என்ன பதில் சொல்வது?

மனைவியின் பெருமூச்சு பெரிதா...

நான் குழப்பத்துடன் இருக்க, அவன் போர்வையை உதறிப் போட்டு எழுந்தான்.

"எனக்கு விளங்குதப்பா... நான் புத்தகத்தில படிச்சனான். காகம் குயிலை துரத்தியடிக்கிற மாதிரி... சரியாய் கஷ்ரப்பட வேணும்... தாய்க்குருவி கட்டின மாதிரி கூடு வேணுமப்பா... நாங்கள் கட்டுற வமப்பா" அவன் சொல்லியபடி என்னை இறுக அணைத்தான். ❖

## ஒரு மரணத்தின் ருசி



ஒரு ஆட்டுக்குட்டி
என்றும் நினைப்பதில்லை
தன் கழுத்தில் விழக் காத்திருக்கும் கத்தியை
என்றும் அது அறிவதில்லை
தன்னை வளர்ப்போனே
ஒரு கொலையாளன் என்பதை

சாவுக்குப் பிறகும்
தனது குருதியும் மாமிசமும்
ஒரு மகிழ்ச்சிக்குரிய பண்டமாகிப் போகுமென்று

துள்ளுகின்றது மகிழ்ச்சியுடன்
அழகாக
நமக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது

பிறகொருநாள் மடிகிறது
நமது குரூரவெளியில் எந்த நிபந்தனையுமின்றி
அது
நமக்கு ருசியாகிப் போகிறது

**கருணாகரன்**

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
குறிப்பிற் குறிப்புணரர் ஆயின் விருப்பினுள்
என்ன பயத்தவோ கண்.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## அகாஷி மட்டுமல்ல...!

இலங்கையில் யுத்தத்தின் பின்னரான புனரமைப்புப்பணிகளுக்கான ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி - அமைதி முயற்சிகள் நெருக்கடியான கட்டத்தை நோக்கிச்சென்று கொண்டிருப்பதாகவும், பாதிப்பு எதுவும் இல்லாமல் தொடர்ந்தும் சமாதானப் பேச்சுக்கள் முன்னேற்றப்பாதையில் செல்ல வேண்டுமாயின், இவ்விடயத்தில் அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அமைதி முயற்சிகளில் தீவிரமான பங்களிப்பும், ஆர்வமும் கொண்டுள்ள யசுஷி அகாஷியின் இக்கருத்தானது - அவரது, மிக ஆழமான அவதானிப்புக்களின் பேரிலேயே வெளியாகியிருப்பதை தன்னைத் தனிப்படச் சந்தித்த சில பத்திரிகையாளர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்.

வட - கிழக்கின் உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுப் பணிகளுக்கான உபகுழுவின் செயலகத்தின் பிரதான ஆலோசகராகவும் - சமாதான முயற்சிகளில் அனைத்துத் தரப்பினரிடமான கருத்துக்களை அறிந்து வைத்துள்ளவராகவும் இருக்கும் யசுஷி அகாஷியின் இக்கருத்து வெளிப்பாடானது - என்ன இவர் இப்படிச் சொல்கின்றாரே....? என மக்கள் மத்தியில் உணர்வலைகளைக் கிளப்பிய போதிலும்,

அமைதி முயற்சிகளின் போக்குக் குறித்த எச்சரிக்கையை அனைவரது மனங்களில் உறுதியாக விதைப்பதாகவும் - அமைதியைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பை வலியுறுத்துவதாகவும் அமைந்திருப்பதை - நிதானமாகச் சிந்தித்தால் ஏற்றுக்கொள்ள முடியும்.

தனது கடந்த விஜயங்களிலும் - அரசாங்க, விடுதலைப் புலிகள் தரப்பினருடனும் அதேவேளை - எதிர்க்கட்சிகளுடனும் - குறிப்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே. வி.பியுடனும் கலந்துரையாடல்களை நடாத்தியிருந்த அகாஷி,

இந்தமுறை, கண்டியில் பௌத்தமத பீடாதிபதிகளையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்தித்துப் பேசிய பின்னர் இக்கருத்தை வெளியிட்டிருப்பது, சமாதானச் சூழலுக்கான அச்சுறுத்தல்கள் வெளிக்கிளம்பி வருவதை உணர்ந்த யதார்த்தபூர்வமான கருத்தாகவே - ஊடகவியலாளர்கள் மத்தியில் பகிரப்பட்டிருக்கிறது.

சமாதானத்திற்கான ஆபத்து என அவர் குறிப்பிட்டுள்ள வேளையிலும், எந்தச் சக்திகள் இந்த ஆபத்தை விளைவிக்கின்றன என்பதை அவர் 'ராஜதந்திர சமாளிப்புடன்' குறிப்பிடாதபோதும் - தெற்கில் எழுந்து வரும் அரசியல் நெருக்கடிகள், பகைமையுணர்வுகள் - நிரந்தரமான அமைதிக்குக் குந்தகம் விளைவித்து விடுமோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருப்பதாகவே, அவரது பேச்சிலிருந்து புரியக்கூடியதாக இருந்ததாக - அகாஷியின் பத்திரிகையாளர் சந்திப்பில் பங்குபற்றியிருந்த நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய போதிருந்த அமைதிக்கான வேகம் - கடந்த வருட இறுதியில் சற்றுத் தொய்வடைந்துவிட்டாற்போலவே தெரிவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

யசுஷி அகாஷியின் இந்த அவதானிப்புக்கள் ஒரு வெளிநாட்டு இராஜதந்திரியின் கவனிப்பு என்பதை விடவும், அமைதி முயற்சிகளை கூர்ந்து நோக்கி வரும் ஒரு மூன்றாம் நபரின், தயவு தாட்சண்யமற்ற, நியாயமான பார்வையாகவே - இருப்பதை ஏற்றுக்கொள்ளவே வேண்டியிருக்கிறது.

உண்மையில் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில்- அதனது அமைதிக்கான முயற்சிகள் இன்னமும் தீவிரம் கொள்ளவில்லை என்பதோடு, தென்னிலங்கையின் அரசியல் சூழலைக் கடந்து - நகர்வுகளை மேற்கொள்வதற்கு அது காட்டும் தாமதங்கள், தமிழ் மக்கள் மத்தியில் அண்மைக் காலத்தில் நம்பிக்கையீனத்தை விதைப்பதாகவே இருந்து வருகின்றன.

குறிப்பாக, போர்நிறுத்தத்தை அமுல்படுத்தவும், மக்களது சுமுக வாழ்வை உறுதி செய்யவும் இதுவரை இணக்கம் கண்ட விடயங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் - அரசாங்கத்தின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு இதுவரை திருப்தி தருவதாக அமையவில்லை.

அதேவேளை, தெற்கிலுள்ள அரசியல் சக்திகளும், பௌத்த மத பீடாதிபதிகளும் - போரில்லாத சூழலை வரவேற்கின்றனரே ஒழிய - தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கவோ அல்லது தமிழ்ப்பிரதேசங்களுக்கான வழக்கமான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதை ஆதரிப்பதற்கோ தயாராகவில்லை என்பதைப் பகிரங்கமாக வெளிக்காட்டி வருகின்றனர்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் - கண்டியில் அஸ்கிரிய, மல்வத்த பௌத்த மத பீடாதிபதிகளை - யசுஷி அகாஷி சந்தித்தபோது கூட, புனரமைப்புப்பணிகளை போர் பாதித்த வட-கிழக்கிற்கு முன்னுரிமையடிப்படையில் மேற்கொள்வதற்கு அவர்கள் விரும்பாத சூழலே காணப்பட்டது.

அத்தோடு முழுநாட்டிற்குமான அபிவிருத்தியிலேயே கவனம் செலுத்துமாறு, பௌத்த மத பீடாதிபதிகள் அகாஷியிடம் கோரியதோடு மட்டுமல்லாது - ஜப்பானிய அரசாங்கத்திடமும் இதனைத் தமது கருத்தாக எடுத்துக்கூறுமாறும் வலியுறுத்தியிருந்தனர்.

இப்படியான கள நிலைவரம் தெற்கில் வியாபித்திருக்கும் போது - வடக்கில் புனரமைப்பு, மனிதாபிமானப் பணிகளில் தாமதம் நிலவுகின்ற போது - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் போக்கு ஒரு நாட்டின் ஜனாதிபதிக்குரிய பொறுப்பிலிருந்து தவறி - போரை நோக்கிய பாதைக்குச் செல்வதாக இருக்கும்போது, இதனடிப்படையில் அமைதிக்கான முயற்சிகள் இக்கட்டான கட்டத்திற்குச் செல்வதையே, யசுஷி அகாஷியின் கருத்துக்கள் வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

எனவே - யசுஷி அகாஷியின் அச்சம் வெறுமனே அவருக்குரியது மட்டுமல்ல. அமைதியை விரும்புவோர், நிரந்தரமான சமாதானம் இத்தீவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என முனைந்து நிற்போர் அனைவருக்கும் பொதுவானதே என்பதே உண்மையாகும். இந்த அச்சுறுத்தல் நீங்கும் சூழலே அமைதியை உறுதிப்படுத்தும் சூழலாகவும் அமையுமென்பதை அகாஷி வாயிலாக, அமைதியை நாடுவோர் அனைவரும் கவலையுடன் முன்வைக்கின்றனர்.

# பெண் போராளிகள் மீது ராணுவத் தாக்குதல்; புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் செயல்

## வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அமைப்பு அறிக்கை

மானிப்பாயில் பெண் போராளிகள் மீது படையினர் காட்டுமிராண்டித்தனமாக மேற்கொண்ட தாக்குதல் விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் செயலாகும் - என இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்களின் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது -

பயங்கரமான அழிவுகளை ஏற்படுத்தி முழு நாட்டையுமே அழிவின் விளிம்பிற்கு அழைத்துச்சென்ற கொடிய யுத்தமானது நிறுத்தப்பட்டு சமாதானத்தின் பெயரால் - விடுதலைப் புலிகளின் தலைமையும், ஐ.தே.முன்னணி அரசும் ஒன்றிணைந்த சமாதான தீர்வும் தன்னாட்சியுடைய சுயநிர்ணயத்திற்குமாக உழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வேளையில், நிராயுதபாணிகளாக அரசியல் பணிபுரியச் சென்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் - மனித உரிமை, பெண்ணுரிமை போன்ற அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் சிறீலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

நியாயம் கேட்டுச்சென்ற பொதுமக்கள், இராணுவ அதிகாரத்தால் அடக்கப்பட்டதும் அப்பட்டமான ஜனநாயக விரோத போக்கும் மனித உரிமை மீறலும் ஆகும். இச்செயலானது விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் செயலாகும்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் யாராய் இருப்பினும் கண்டிக்கப்பட வேண்டியவர்களும், தண்டிக்கப்படவேண்டியவர்களும் ஆவர். இவ்விடயத்தை இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் அமைப்பின் சார்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் நடவடிக்கைக்கு உட்படுத்தவேண்டுவதுடன், பாரபட்சமற்ற விசாரணை நடாத்தி எதிர்காலத்தில் இவ்வித அடக்குமுறைகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் எமது அமைப்பு வேண்டிக் கொள்கிறது - என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தமிழீழத் தேசிய விளையாட்டு விழா 20 ஆம் திகதி ஆரம்பமாகின்றது

தமிழீழத் தேசிய விளையாட்டுத்துறையினால் நடத்தப்படும் இரண்டாவது தமிழீழத் தேசியப் பெருவிளையாட்டுவிழா கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் எதிர் வரும் 20 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 5 நாட்கள் இரவு பகலாக நடைபெறவுள்ள இவ்விளையாட்டுப் போட்டியில் தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 60 பேர் பங்குபற்றவுள்ளனர்.

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு ஏனைய பொலிஸாரைவிட அதிக சம்பளம்!

## பொலிஸார் மட்டத்தில் சர்ச்சை

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸாருக்கு விசேட சம்பளக் கொடுப்பனவுகள் வழ்ங்கப்படுவது குறித்துச் சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன.

பொலிஸ் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் பத்து மணி நேரம் - எந்த வித மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் இன்றிப் பணியாற்றி வருகின்றனர். பொலிஸ் சேவை தொடர்பான சட்டங்களில் பொலிஸாருக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகள் குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸாருக்கு ஆறுமணி நேர வேலையே வழங்கப்படுவதாகவும், இவர்களுக்கு நாளொன்றுக்கு 230 ரூபா சம்பளம் வழங்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் 1000 பொலிஸார் கடமையாற்றி வருகின்றனர். இவர்களுக்கு - ஏனைய பொலிஸாரை விட அதிக சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றமை பலத்த சர்ச்சைகளை உருவாக்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# அடக்குமுறை அடாவடித்தனத்துக்கு மத்தியில் நீதிக்காக குரல் தரும் ஊடகவியலாளர்கள்

ஜனநாயக உறுதிப்பாட்டுக்குத் தொடர்பு சாதனங்களின் சுதந்திரமான செயற்பாடு அவசியமானது. மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளைப்போலவே கருத்து வெளியிடும் உரிமையும் சட்டபூர்வமாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையாகும். மக்கள் அனைவரும் பெற்றிருக்கின்ற சுதந்திர உரிமைகளில் பேச்சுச் சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

ஒரு ஜனநாயக நாட்டில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவை வெகுஜன தகவல் அமைப்புகளாக உள்ளன. நாடாளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக ஊடகத்துறை விளங்குகின்றது. இவ்வூடகத்துறை சமூக உணர்வைத் தட்டியெழுப்பும் சமுதாயததின் முக்கிய அங்கமாகவும் இருக்கிறது.

**தகவல்களை மக்களிடம் சேர்ப்பது ஊடகவியலாளருக்குரிய அடிப்படை உரிமையே!**

அதேவேளை, மக்கள் ஆட்சியில் ஊடகங்களின் பணி மிகவும பொறுப்பு வாய்ந்ததாகவும் இருக்கின்றது.

ஊடகங்களின் பணியை எடுத்துக்கொண்டால், மக்களுக்குத் தேவையான செய்திகளைத் தெரிவிப்பது, அவர்களைச் சிந்திக்க வைப்பது, அவர்களிடம் பொதுக்கருத்தை உருவாக்குவது, அநீதிகளை வெளிக்காட்டுவது, ஆட்சியாளர்களின் தவறைத் திருத்துவது, நல்ல ஆலோசனை வழங்குவது, ஆதரவற்றவர்களுக்கு உதவுவது, நியாயத்தின் பக்கம் நின்று மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பது, நாட்டு நலன், மக்கள் நலனைப் பாதுகாப்பது என்று நீண்டுசெல்லும்.

நியாயத்திற்கும், நீதிக்கும் போராடுவதையே இலட்சியமாகவும், தர்மமாகவும் கொண்டு, தங்கள் சுயநலத்தைப் பின்தள்ளி, உயிரையே பணயம் வைத்து செயற்பட்டுவரும் ஊடகவியலாளருக்கு அரசு மட்டுமல்ல, வல்லமைமிக்க தனிமனிதர்களும் அஞ்சித்தான் ஆகவேண்டும். இதனால்தான் "ஆயிரம் வாள் முனைகளைக் காட்டிலும் ஒரு பேனாமுனையைக் கண்டே நான் பெரிதும் அஞ்சுகிறேன்" என்றான் மாவீரன் நெப்போலியன்.

இவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலிபோல் ஆனநிலையில், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் அரசபடையினரால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நியாயப்படுத்த முடியாத இத்தகைய சம்பவங்களை - பொதுமககளுக்கு நடுநிலையான செய்திகளை வழங்கும் ஊடகவியலாளர்கள் வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. இது அவர்களின் அடிப்படை உரிமைகளைக்கூட மீறும்செயலகளாகும். இதற்கெதிராகக் குரல்கொடுக்கும் அவசியம், தனியே தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டும் உரியதல்ல.

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார ரீதியாக ஏற்படப் போகும் ஒரு முட்டுக்கட்டை நிலைக்கெதிராக நாட்டிலுள்ள அனைத்து ஊடகவியலாளர்களினதும் குரல்கள் ஒருமித்து ஒலிக்கவேண்டும்.

வெறும் பரபரப்பை மட்டும் விரும்பும் மக்களுக்குத் தீனி போடுவதை விடுத்து, மண் விடுதலை, இலட்சியம், சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றைத் தர்மமாகவும், வழிகாட்டு நெறியாகவும் கொண்டு செயற்படுவதோடு - சமூக சீர்திருத்தம், பெண் விடுதலை, தீண்டாமை ஒழிப்புப் போன்ற சமூகக் குழுமத்தின் கருத்தியல் ரீதியான தோற்றப்பாடுகளுக்கும் முக்கியபங்கு கொடுப்பது தமிழ் ஊடகவியலாளர்களின் தட்டிக் கழிக்கமுடியாத கடமையாகும்.

அடக்குமுறைகளிலிருந்து ஈழத்தமிழர்களை விடுவித்து அவர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான போராட்டம் பல்வேறு முனைகளிலும், பல்வேறு வடிவங்களிலும் மேற்கொள்ளப்படும் இந்தக் காலகட்டத்தில், சமூகச் சீரழிவுக்குக் காரணமானவர்களின் பிடியிலிருந்து தமிழர்களின் சமூக மற்றும் வாழ்வியல் தத்துவங்களைக் காப்பாற்றி, அவர்களின் கலாசார, பண்பாட்டு விழுமியங்களைத் தக்கவைத்துச் சமுதாய ஒழுக்கத்தைப்பேண - மற்றொரு விடுதலைப் போராட்டமொன்றை அவசரமாக முன்னெடுக்க வேண்டிய அவசியம் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

என்றுமில்லாதவாறு கலாசாரச் சீரழிவுகளும், பண்பாட்டு இழிசெயல்களும் நாட்டில் மலிந்து, பல்கிப்பெருகி வருவது பேரச்சத்தைத் தருவதாகவுள்ளது. திருட்டு, கொள்ளை, அபகரிப்பு, பலவந்தமாக அசையும், அசையாச் சொத்துக்களைக் கைப்பற்றுதல் என்று மாற்றான் பொருட்களில் கைவைக்கும் செயல்கள் ஒருபுறம். மது, மாது, போதைவஸ்து, நீலப்படம், கசிப்பு என்று தன்னைத்தானேயும், அதன்மூலம் சமூகத்தையும் சீரழிக்கும் பழக்க வழக்கங்கள், செயல்கள் மறுபுறம். வரைமுறையான கட்டுப்பாடுகள் இல்லாததால் இளைஞர்கள் கூட்டம் கும்பலாகச் சேர்ந்து - அடாவடித்தனங்களிலும், அத்துமீறல்களிலும் ஈடுபடுவது சகஜமாகிவிட்டது. இவற்றுக்கு மத்தியில் சமூகச் சீரழிவைத் தடுத்து நிறுத்தி எமது சமூகத்தைக் காப்பாற்றுகின்ற தார்மீகக் கடமை ஒவ்வொரு தமிழ் ஊடகவியலாளரையும் சார்கிறது.

இவ்வாறான நிலையில் - சமூகத்தின் காவலர்களாக ஊடகவியலாளர்கள் துணிந்து பணியாற்ற வேண்டிய சூழலில் -

தமிழ் ஊடகவியலாளர்கள் மீது படையினரால் தொடுக்கப்பட்டு வருகின்ற - அடக்குமுறைகளும், அடாவடித்தனங்களும் எல்லை மீறிச்செல்கின்றன.

எங்கெங்கு நியாயம் தவறுகின்றதோ அங்கெல்லாம் சென்று செய்திகளைத் திரட்டி - தர்மத்தினை நிலைநாட்டப் போரிடும் ஊடகவியலாளர்கள், தாம் யாரென அடையாளங்காட்டியபோதும் - அடித்து நொறுக்கப்படுகிறார்கள்.

இதனை இன்றைய நாகரிக சமூகம் ஏற்றுக்கொள்ளமுடியாது. உண்மைகளை, நீதியை, நேர்மையை நிலைநாட்ட முனையும் - ஊடகவியலாளர்களுக்குத் துணையும், பலமும் தரவேண்டியவர்களாகச் சமூகத்தினர் இருக்கவேண்டும்.

அதேவேளை - நடக்கும் அநீதிகள் பற்றி ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு, ஒருமித்து நீதிகேட்கத் தயாராகவேண்டும்.

தகவல் அறியும் உரிமை பாதிக்கப்பட்டிருந்தால், அது ஜனநாயகத்திற்கான முதலாவது சாவுமணியாகும். இவ்வுரிமையையடைய, தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவரும் கைகோர்த்தல் வேண்டும். ஒன்று சேர்ந்தால் உண்டு தீர்வல்லவா...?

எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி.

# வாதரவத்தைப் பகுதியில் பாடசாலைகளுக்கு செல்லாத, இடைவிலகிய மாணவர்கள் அதிகம்

## முறைசாராக் கல்விப்பிரிவின் ஆய்வில் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விவலய முறைசாராக் கல்விப்பிரிவு முகாமைத்துவ மாணவர்கள் வாதரவத்தைப் பிரதேசத்தின் கல்விநிலை பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

கடந்தவாரம் முகாமைத்துவப் பயிற்சி பெற்றுவரும் இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பிரதேசத்தின் கல்விநிலை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டனர்.

வாதரவத்தை, வீரவாணி, பொக்கணைப் பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளுக்குச் செல்லும் - செல்லாத மாணவர்களுடைய விபரம், முன்பள்ளிகள், பாடசாலைகள் பற்றிய தகவல்கள், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், பாடசாலைக்குச் செல்லாத, பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களின் விபரங்களை இவர்கள் சேகரித்துள்ளனர்.

இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின்போது, பாடசாலைக்குச் செல்லாதவர்கள் மற்றும் இடையில் விலகிய மாணவர்கள் இப்பகுதியில் அதிகம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, முறைசாராக் கல்விப் பிரிவினால் இந்தப் பகுதிகளில் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டு வருவதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## 1700 தென்னங்கன்றுகள் தென்மராட்சியில் விநியோகம்

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்தத்தால் அழிக்கப்பட்ட தென்னந் தோப்புக்களை மீளவும் உருவாக்கும் நோக்குடன் - தென்னை அபிவிருத்திச் சபையினர் 1700 தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளனர்.

பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது கல்வயல், மட்டுவல், சாவகச்சேரி, நுணாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 850 பேருக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (34)

# எரிபொருள் கொண்டு செல்வோர் மீது முகமாலையில் படையினர் கெடுபிடி

யாழ்.குடாநாட்டில் இருந்து வன்னிக்கு எரிபொருட்கள் எடுத்துச் செல்வோர் மீது முகமாலை சோதனைச் சாவடியில் படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எரிபொருட்களை வன்னிக்கு கொண்டு செல்வோரை அரசாங்க அதிபரிடம் அனுமதிக் கடிதம் பெற்று கொண்டு வருமாறு படையினர் திருப்பி அனுப்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், எரிபொருட்களை எவ்வித தடைகளுமின்றி வன்னிக்கு எடுத்துச்செல்ல முடியுமென்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

படையினரின் இச்செயல் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# சந்திரிகா, பொன்சேகா கொடும்பாவி வல்வெட்டித்துறை பகுதியில் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்ப் பகுதியில் போராளிகள் மீதும், பொதுமக்கள் மீதும் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறையில் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

ஜனாதிபதி சந்திரிகா, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரின் கொடும்பாவிகளே எரிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியிலிருந்து இழுத்துவரப்பட்ட இருவரினதும் கொடும்பாவிகளுக்கு ஆதிகோவிலடியில் வைத்து தீ மூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுமக்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், கடற்தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டனர் (ச)

# தமிழ் அரசியற்கைதிகள் சபிக்கப்பட்டவர்களா...?

"உண்ணாவிரதம்" என்ற சொல் மகாத்மா காந்தியின் அகிம்சை வழிப் போராட்டத்துடன் உலகம் முழுவதும் பிரபல்யமான ஒரு விடயமாகும். பிரித்தானிய ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்கு எதிராக, தனிமனிதனான மகாத்மா காந்தி உண்ணாவிரதம் என்ற அஸ்திரத்தைப் பயன்படுத்தினார்.

இலங்கையில் உண்ணாவிரதப் போராட்டங்கள் பல்வேறு காலகட்டங்களில் முனனெடுக்கப்பட்டன. ஆனால், 21 ஆம் நூற்றாண்டிலும் அதனை ஓர் ஆயுதமாக அல்லது ஒரு மார்க்கமாக பின்பற்றி வருபவர்கள் "தமிழ் அரசியற் கைதிகள்" என்ற திருநாமத்துடன் தென்பகுதிச் சிங்களச் சிறைச்சாலைகளில் வாடுகின்ற ஆண், பெண் கைதிகளாவர்.

விடுதலைப் புலிகளுக்கும் - இலங்கை அரசிற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி, மோதலின்றி ஐந்து கட்டங்கள் அரச - புலிகள் பிரதிநிதிகள் பல நாடுகளில் சுமுகமான பேச்சுவார்த்தைகளையும் நடத்திவிட்டார்கள்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் சிங்கள மக்கள் அதிகம் பேர் நாக



வீகாரை தரிசனத்தையும் முடித்துக் கொண்டுவிட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச்செல்ல வன்னியிலும் தரவையிலும் உலங்குவானூர்த்திகளும் நினைத்த நேரத்தில் இறங்கி ஏறுகின்றன. இதுவெல்லாம் சமாதானம் தந்த நம்பிக்கையால் மட்டுமே இன்றுவரை சாத்தியமாகியுள்ளது. சமாதானச் சூழல் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியும் ஆகப்போகிறது.

இந்தக் காலகட்டத்திற்கூட தமிழ் அரசியற் கைதிகளின் நிலை அரசாங்கத்தால் கவனிக்கப்படாது விடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டால் அல்லது புலிகளின் மீதான தடை நீக்கப்பட்டால் இலங்கை அரசு தம்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டு காலாவதியாகிவிடும் என்ற எதிர்பார்ப்பு சமாதானம் ஆரம்பிக்கப்பட்ட போது கைதிகளிடம் காணப்பட்டது.

ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாமல் புலிகள் மீதான தடை மட்டும் நீக்கப்பட்டதால் அந்த எதிர்பார்ப்பு கனவாகிவிட்டது.

இன்னொரு மாற்று வழி தமக்குக் கிடைக்கக்கூடும் என்று யோசித்த கைதிகள் தமக்கு "பொதுமன்னிப்பாவது" வழங்கப்படக்கூடும் என எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அதைப் பற்றி யாரும் அக்கறை கொண்டதாக இல்லை.

அண்மையில் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் வெளியிட்ட அறிக்கையொன்றில், ஐ.நா செயலாளர் கோபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக குறிப்பிட்டிருந்தனர்.

இப்போது அவரது விஜயம் கூட ஒத்திவைக்கப்பட்டு, அக்கைதிகளின் போராட்ட வழிமுறையில் மண்ணள்ளிப் போட்டுவிட்டது.

தற்போதைய நிலையில் களுத்துறைச் சிறைச்சாலையில் ஆண் கைதிகளும், வெலிக்கடைச் சிறைச்சாலையில் பெண் கைதிகளென நூற்றுக்கும் குறைவான கைதிகளே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 25 பேர் வரையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கூறித் தண்டனை பெற்றவர்களாகவும் உள்ளனர் (6 மாதம் தொடக்கம் 200 வருடங்கள் வரை தண்டனை பெற்றவர்கள்).

விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலைகூட துரிதப்படுத்தப்படாத நிலையில் குற்றவாளிகளாக குறிப்பிடப்பட்ட கைதிகளின் நிலை நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவாறு உள்ளது.

கொழும்பு நீதிமன்றங்களில் குற்றவியல், சிவில் வழக்குகளுடன் பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகளும் விசாரிக்கப்படுவதால் - நீதிமன்றங்களில் வேலைப்பழு அதிகமாக உள்ளது எனவும், அதனால்தான் பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகள் இழுபடுகின்றன என்று 2002 ஆம் ஆண்டு பிற்பகுதி வரை காரணம் கூறப்பட்டது.

இந்த நடைமுறைச் சிக்கலை நிவர்த்தி செய்வதற்கும், பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்காகவும் வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகத்திற்குள் ஒரு புதிய நீதிமன்றம் ஆரம்பிக்கப்படடது. இது சர்வதேச மனித உரிமை அமைபபுக்களைத் திருப்திப்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஒரு தற்காலிக ஏற்பாடாகவே எண்ணவேண்டியுள்ளது. இவ்வாறான தனி நீதிமன்றத்தினாற் கூட எஞ்சியுள்ள கைதிகளின் வழக்குகளை விரைவுபடுத்தி முடிவிற்குக் கொண்டுவர முடியாதுள்ளது.

கைதிகள் பரிமாற்றம் செய்யும் அளவிற்கு விடுதலைப் புலிகளிடம் யுத்தத்தில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் இல்லை என்று சொல்லப்படுகிறது.

தற்பொழுது தடுப்புக் காவலில் உள்ள கைதிகளில் பெரும்பாலானோர் திருமணமானவர்கள், இயல்பு வாழ்க்கையில் தமது குடும்பத்தை வாழ வைப்பதற்காக பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர்கள். அவர்களைப் புலிகளுக்கு உதவியதாக அல்லது ஒத்துழைத்ததாகக் கைது செய்து இற்றைவரை சிறையில் போட்டு வதைப்பது ஒரு மனித உரிமை மீறலாகும்.

தற்பொழுது கைதிகளாக உள்ள பலரிடமிருந்து ஆயுதங்களும், வெடி

**விஜயன்**

பொருட்களும் மீட்கப்பட்டதாக அரசு குற்றம் சுமத்தியுள்ளது. ஆனால், அவர்களுக்கு ஒரு கைக்குண்டைக் கூட வீசும் ஆற்றல் இல்லை என்பது நன்றாகவே அரசுக்குத் தெரிந்திருந்த போதிலும் அவர்களைத் தண்டித்தேயாக வேண்டும் என அரசு கங்கணம் கட்டி நிற்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

"விசாரணை செய் அல்லது விடுதலை செய்" என்ற கோஷத்துடன் பல வருடங்களை கைதிகள் சிறைக்குள் கழித்து விட்டனர். இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்ட போதெல்லாம் பல அரசியற் தலைவர்கள் அங்கு சென்று அவர்கள் முன் அளித்த வாக்குறுதிகள் பஞ்சாய்ப் பறந்துவிட்ட நிலையில், அவர்கள் யாருமே கைதிகளைச் சந்திக்கும் தார்மீக பலத்தை இழந்துவிட்டனர். அரசியற் கைதிகள் தமது சொந்தப் பிரச்சினைக்காக சிறைக்குள் இருக்கவில்லை. தேச விடுதலையின் பெயரால் சிறைக்குள் அடைக்கப்பட்டவர்கள். எனவே, அவர்களை விடுவிக்கும் பொறுப்பு முழுதும் தமிழ்ச் சமூகத்திற்கு உரியதாகும்.

பல வருடங்களாகச் சிறைச்சாலையின் தரம் குறைந்த உணவுகளை உண்டவாறு சிறைக்குள் வாழுபவர்கள் சுகதேகிகள் அல்லர்.



அவர்களின் உலர்ந்த வயிறுகளும், சுவை உணரமுடியாத நாக்கும், நலிந்து போன உடலும், சோர்வடைந்த உணர்வுகளும் ஒருநாள் உண்ணாவிரதத்தைக்கூட தாங்கமுடியாத அளவில்தான் இருககும். அல்லது ஒரு தடவை உண்ணாவிரதம் இருந்தவனுக்குப் பல நிரந்தர நோய்கள் வந்து துன்பப்படுகின்ற நிலையே காணப்படுகின்றது.

எல்லாவற்றையும் விட வெலிக்கடைப் பெண் கைதிகளின் நிலை இன்னும் மோசமானது. சமாதானச் சூழலில் சிறைக்குள் வாழுவதே துன்பம். அதையும் மீறி ஏனைய சிங்களக் கைதிகளாலும், சிறைச்சாலை ஊழியர்களாலும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வதைகளும், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களும் கண்டு கொள்ளப்படாமலே இருக்கின்றன.

கைதிகளும் மனிதர்கள். அதுவும் எமது மண்ணின் மக்கள். இந்த எண்ணப்பாங்கு தமிழர் தாயகப் பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்காவது ஏற்படவேண்டும்.


அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஐந்து கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்த நிலையில் உளளது. எனவே கைதிகளின் விடுதலையும் சமாதானத்தின் ஒரு விளைவாக மாற்றப்படவேண்டியது கட்டாயமாகும். மனித உரிமை அமைப்புக்கள், சர்வதேச அமைபபுக்கள், அரசியற் கட்சிகள் எல்லாமே இதன் பங்காளிகளாக மாற வேண்டும்.

தமிழ் அரசியற் கைதிகளைப் பற்றிக் கைதிகளின் குடும்பங்கள் மட்டும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அளவிற்கு அது ஒன்றும் தனிநபர் பிரச்சினை அல்ல. குறைந்தபட்சம் தற்போது சிறைகளில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளுககு பிணையாவது வழங்கப்படவேண்டும். அதன் மூலம் சபிக்கப்பட்ட துன்ப வாழ்விலிருந்து அவர்களும் மீண்டு இந்தச் சமாதானச் சூழலை அனுபவிக்க முடியும்.

கைதிகளால் நான்கு சுவர்களுக்கிடையில் நின்றுகொண்டு செய்யக்கூடிய அதியுயர் காரியம் உண்ணாவிரதம் இருப்பது மட்டும்தான். அவர்களை மீட்டெடுக்கும் பணிகள் நான்கு சுவர்களுக்கு வெளியில் நிற்பவர்களுக்கு மட்டும்தான் உண்டு.

கைதிகளின் விடுதலையை ஒரு வரலாற்றுக கடமையாக வெளியில் உள்ளவர்கள் கருதும்வரை கைதிகள் துன்பப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றுதான்.

# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## ஏன் இந்தத் தடுமாற்றம்...?

இந்திய ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றம். ஆசிய ரசிகர்களுக்கு அதி ருப்தி. கிரிக்கெட் ரசிகர்களுக்குப் ரும் கோபம். எதிர்பார்க்கப்பட்ட ஆட்டம் ஏன் இப்படிப் போயிற்று?

இந்திய அணி, வேகப்பந்துவீச் சாளர்களைச் சந்திப்பது இதுவா முதன்முறை? இல்லையே, அல்லது தொடர்ச்சியான தென்துருவக் கிரிக் கெட் தொடரின் பின்னரான மத்திய கோட்டு வெப்பம் தாங்க முடியவில் லையா? அல்லது தொழில்சார் ஆட் டத்தில் பெரும் ஊடுருவியிருக்கும் பணமழை செய்திருக்கும் சதியா? அல்லது இதோடு தொடர்புபட்டிருக் கும் சின்னத்திரையில் தமது கதாநா யகர்கள் தோற்றத்தைக் காட்டுவ தற்கு (விளம்பரங்களில்) செலவிடும் முக்கியத்துவம் "தொழிலில்" காட்டு வதற்கு செலவிடப்படாமையா?

இவற்றைப் பிரேத பரிசோதனை செய்வதற்கு முன், அவுஸ்திரேலியா எப்படி இவ்வளவு "Simple" ஆக வென்றது என்பதையும் பார்க்கத் தானே வேண்டும்.

சிறப்பாக பிரெட் லீ, ஜிலெஸ்பி, [illegible]ா மூவரின் (முதல் இருவர் A-Class) நேர்த்தி, Ritythm Bouncer இற்குச் சற்றுக்குறைத்துப் பந்தை உயர்த்தும் சாதுரியம், அவர்களுக் குத் துணையாக களத்தடுப்பின் அற்புதம் (மைதானத்தில் லாவக மாக நீந்துதல், பறந்து பந்தை விழுங் குதல்), அணியின் கட்டுக்கோப்பு, தாம்தான் உலகச் Champion என்ற தன்னம்பிக்கை, பின்னர் ரன் சேக ரித்த நேர்த்தி, வேகம் (ஒரு Six ரசிகர்களின் பத்து வரிசைக்கப்பால்).

தவறுவிட்ட ஒரே ஒரு சந்தர்ப்பம் (கில் கிறிஸ்ற் Stumped) என்ன அருமை. என்ன அருமை.

ஷேவாக்கும், கங்கூலியும் வேலி கடந்த பந்தைத் துரத்திச்சென்று தானே தற்கொலை செய்து கொண் டார்கள். ஏன், சச்சின் சொதப்பவில் லையா? சச்சின், கங்கூலி இருவரும் "கட்டுண்டோம், பொறுத்திருப்போம்" என்று கவாஸ்கர், போய்கொட் பாணியில்தானே ஆடினார்கள்.

கை.ஃப் நல்லதொரு இளம்வீரர். ஆனால், ஏன் அந்த Hook Shot. அதுவும் அன்ட்ரீ அடம்ஸ் இருந்த திசை நோக்கி. வீணாகக் கொடுத்த விலை அல்லவா அது. ஹர்பஜனும் கும்ளேயும் சேர்த்த ஓட்டங்கள் 125 இற்கு 44. ஹர்பஜனின் அரைவாசி ஓட்டங்களாவது Neat Stroke Play யால் வந்தது என்பதை மறுக்க முடியாது. அவுஸ்திரேலிய அணியை விஞ்சவிடாமல் செய்திருக்க வேண் டிய முன்வரிசை ஆட்டக்காரர்கள்,



சிமென்ஸ்-டன் ஹார்வி

பதிலாகத் தம்மைத் தாக்கிக் கொண் டார்கள். இந்திய வீரர்களின் முதிர்ந்த பகுதியினர் Fielding கலையை இட் டுக் கவலையேபடவில்லை.

அவுஸ்திரேலியா, இந்தியாவுக் குச் சரியான கணிப்பைக் கொடுத்தே தன் முதற்தர அணியை களமிறக்கி இருந்தது. இதிலிருந்தே, இந்திய அணியை ஒரு சவாலாகவே அவுஸ் திரேலியா எடுத்துக்கொண்டது என் பது தெளிவு. ஆனால், இந்திய அணி உளவியல்ரீதியாகவே தம் மைத் தாழ்த்திக் கொண்டு ஆட ஆரம்பித்து அதலபாதாளத்தில் விழுந்துவிட்டமை பரிதாபத்திற்குரி யது.

விளம்பரங்களில் சிங்கத்தைக் கண்டு பயந்தோடும் கங்குலி And Co., சென்சூரியன் பார்க்கில் கங்கா



ருகளைக் கண்டு ஓடி இருக்கிறார் கள்.


இன்னும் ஒரு வகையில் நடுவ ரின் சில தீர்ப்புகள் சர்ச்சைக்குரியன வாக இருப்பது போலவே தோன்று கின்றது. இது மிகவும் சிக்கலான நிலைதான். ஒரு பந்து கால்தடுப்பில் படும்போது, அதற்கு நடுவர் அவுட் கொடுத்தால் - அது இடது விக்கெட் டைத் தட்டிக்கொண்டு போய் இருக் கும் என்பார் TV வர்ணனையாளர். அதே பந்துக்கு நடுவர் அவுட் கொடுக் காவிட்டால், TV வர்ணனையாளரும் Very Close, அந்தப்பந்து இடது விக்கெட்டுக்கு அப்பால்தான் சென்றி ருக்கும் என்று பக்கப்பாட்டுப்பாடு வார். இந்த விடயம் அந்த இறைவ னுக்குத்தான் வெளிச்சம். இப்போது பல்வேறு தரப்பாரும் சேர்ந்து கிரிக் கெட்டை வேகமாகக் Close பண் ணிக்கொண்டு வருகிறார்கள்.

என்னதான் இருந்தாலும், இந் தியா இவ்வளவு மோசமாக விளை யாடியதற்கு எதுவித சமாதானமும் கூறமுடியாது. சரி, நான்கு விக்கெட் டாவது சரித்தீர்களா? அதுவும் முடி யவில்லையே. இந்த நிலையில் இந் தியா போனால் முதலாம் கட்டத் தைத் தாண்டல் என்பது கனவுதான். Hats Off Aussies.

*வி. ஏ. கோவி*

## எப்படி, எதுவரை....!

அணிகள் எவ்வாறு உலகக் கிண்ணப் போட்டிகளைச் சந்திக்கப் போகின்றன. பலம் பலவீனங்கள் என்ன? இதோ ஒரு கணிப்பு சர்வ தேச நிறுவனமொன்றில் நடாத்தப் பட்டது இது. இதில் உங்கள் கருத் தென்ன. நீங்கள் ஒத்துப் போகிறீர் களா? இல்லை மறுத்துத்தான் அடிக்கப் போகிறீர்களா?



### இந்தியா

*அணித்தலைவர்* - சௌரவ் கங் கூலி.

*பயிற்றுநர்* - ஜோன் ரைட் (நியூ சிலாந்து).

*குழு A* - அவுஸ்திரேலியா, இங் கிலாந்து, பாகிஸ்தான், சிம்பாப்வே, நமீபியா, நெதர்லாந்து.

*பலம்* - வேகமான தடங்களில் சறுக்கல்கள் இருந்தாலும், மிகப் பலமானதொரு துடுப்பாட்ட வரிசை யைக் கொண்டது. அணிக்குள் சிறந்த ஒத்திசையுந் தன்மை (TEAM SPIRIT) காணப்படும். அதேவேளை, புதிய இளைஞர் குழாமொன்றின் உள்வாங் கல் சிறப்பான பலம். இது மூத்த உறுப்பினர்களின் பாரிய பொறுப்பி லிருந்து சிறிது RELAX கொடுக்கும்.

*பலவீனம்* - அழுத்தமான சூழ்நி லைகளில் பந்து வீச்சு பொதுவா கவே தவறுகள் நிறைந்ததாவும், ஏறுமாறானதாகவும் அமைந்துவிடும் தன்மை. களத்தடுப்பு அப்படியொன் றும் பிரமாதமாக இல்லை. மூத்த வீரர்களின் களத்தடுப்புத் தேய்ந்து கொண்டு போகும் நிலை. யுவராஜ், கை.ஃப் போன்றோர் மட்டுமே சர்வ தேசதரத்தை நெருங்கிக் கொண்டி ருக்கிறார்கள்.

*முக்கிய நபர்* - சச்சின் டென் டுல்கர்.

மூன்றாவது தடவையாக உல கக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்கின்றார். எவ்வித களமும், தடமும் இவரைப் பாதிப்பதில்லை. உலகில் அதிசிறந்த BATSMAN. தென்னாபிரிக்கக் களங்களில் இவர் தன் திறமையைக் காட்ட வேண்டும். அதிர்ஷ்டம் நிறைந்த பந்துவீச்சாளர். பிரிக்க முடியாத இணைகளை இவ ரது பந்துவீச்சு பலதடவைகளில் பிரித்துள்ளது.

*ஒருநாள் தரம்* - காயங்கள், உபாதைகள் என்ற துன்பங்களுக் குப் பெரும்பாலும் ஆளாகாத அணி. வளர்ச்சிப்பாதையில் சென்றுகொண் டிருக்கும் துடுப்பாட்டத் தரம். உதார ணம் - 326 ஓட்டங்களை நோக்கிச் சென்று சாதித்தமை. ICC இணைச் சம்பியன். 4-3 என்றவாறு தம் மண் ணில் மேற்கிந்தியாவிடம் தோல்வி. 5-2 என்றவாறு நியூசிலாந்திடம் தோல்வி. வேகமான பந்துவீச்சுத் தடங்களில் CLUE LESS.

*முன்னைய உலகக் கிண்ணச் சாதனை* - 1983 இல் மேற்கிந்தியா வைச் சரித்து உலகச் சம்பியன் பட்டம். 1975, 79 இல் தலா ஒவ் வொரு ஆட்டம் வெற்றி. 1987, 96 அரையிறுதி. 92 இல் முதற்சுற்றில் OUT. 99- SUPER SIX வரை.


*எதிர்வு கூறல்* - அரை இறுதி ஆட்டம் வரை.


## நேற்றைய போட்டிகளிலிருந்து



மைக்கல் வகன்


சலீம் எலாகி


அசுர சதம் அடித்த கிப்ஸ்


மக்மிலன்

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ணப் போட்டிகளில் ஒரு அணியில் அதிகுறைவாகப் பெறப்பட்ட ஓட்டங்கள் எத்தனை?

கனடா, 45 - Vs இங்கிலாந்து (1979)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### தென்னாபிரிக்கா எதிர் நியூசிலாந்து அணி

#### தென்னாபிரிக்கா அணி

| | | |
|---|---|---|
| ஸ்மித் | C மக்கல்லம் b பொண்ட் | 23 |
| கிப்ஸ் | C மக்கல்லம் b ஓரம் | 143 |
| போயே | b ஸ்டைரிஸ் | 29 |
| கலிஸ் | C வின்சன்ட் b வெட்டோரி | 33 |
| பவுச்சர் | C கெய்ன்ஸ் b ஓரம் | 10 |
| குளூஸ்னர் | not out | 33 |
| பொல்லக் | C ஓரம் b அடம்ஸ் | 10 |
| கேர்ஸ்ரன் | not out | 05 |
| உதிரிகள் 20 | | |
| மொத்தம் 6/306 (50 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு - நியூசிலாந்து அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பொண்ட் | 10 | 0 | 73 | 1 |
| அடம்ஸ் | 9 | 0 | 57 | 1 |
| ஓரம் | 8 | 0 | 52 | 2 |
| ஸ்டைரிஸ் | 10 | 0 | 44 | 1 |
| வெட்டோரி | 10 | 0 | 58 | 1 |
| அஸ்ரல் | 3 | 0 | 16 | 0 |

#### நியூசிலாந்து அணி

| | | |
|---|---|---|
| மக்மிலன் | C பவுச்சர் b டொனால்ட் | 25 |
| பிளெமிங் | not out | 134 |
| அஸ்ரல் | not out | 54 |
| உதிரிகள் 16 | | |
| மொத்தம் 1/229 (36.5 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு -தென்னாபிரிக்க அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பொல்லக் | 8 | 0 | 36 | 0 |
| என்ரினி | 8 | 1 | 33 | 0 |
| டொனால்ட் | 5 | 0 | 42 | 1 |
| கலிஸ் | 8.5 | 0 | 57 | 0 |
| போயே | 2 | 0 | 16 | 0 |
| குளூஸ்னர் | 5 | 0 | 37 | 0 |

தென்னாபிரிக்காவை டக்வேர்த் லூயிஸ் முறையில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது. இதுவரை நியூசிலாந்து பெற்ற மொத்தப் புள்ளிகள் - 08.

### பாகிஸ்தான் எதிர் நமீபியா அணி

#### பாகிஸ்தான் அணி

| | | |
|---|---|---|
| அன்வர் | C பேர்கர் b கோட்ஸ் | 23 |
| சலீம் | C கோட்ஸ் b பேர்கர் | 63 |
| மொகமட் | C ஸ்கூர் b பேர்கர் | 28 |
| இன்சமாம் | b கோட்ஸ் | 04 |
| யுகானா | C பேர்கர் b கோட்ஸ் | 43 |
| லத்தீப் | b ஸ்னைமன் | 36 |
| அக்ரம் | not out | 20 |
| ரஸாக் | C ஸ்கூர் b ஸ்னைமன் | 04 |
| வக்கார் | run out | 08 |
| சக்லைன் | run out | 01 |
| அக்தர் | not out | 03 |
| உதிரிகள் 22 | | |
| மொத்தம் 9/255 (50 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு - நமீபியா அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஸ்னைமன் | 8 | 0 | 51 | 2 |
| வன்வியூரன் | 10 | 1 | 47 | 0 |
| பி. எல். கோட்ஸ் | 10 | 1 | 51 | 2 |
| எல். ஜே. பேர்கர் | 10 | 0 | 45 | 1 |
| டி. பி. கோட்ஸ் | 8 | 0 | 32 | 1 |
| ஏ. ஜே. பேர்கர் | 4 | 0 | 18 | 1 |

#### நமீபியா அணி

| | | |
|---|---|---|
| வன்ரூய் | C லத்தீப் b அக்ரம் | 00 |
| சுவான்போல் | C இன்சமாம் b அக்தர் | 01 |
| ஏ. ஜே. பேர்கர் | C மொகமட் b அக்தர் | 14 |
| கியூல்டர் | b அக்தர் | 00 |
| றொய்ட் | Lbw b அக்ரம் | 04 |
| எல். ஜே. பேர்கர் | Lbw b அக்ரம் | 00 |
| டி. பி. கோட்ஸ் | Lbw b அக்ரம் | 08 |
| ஸ்னைமன் | Lbw b அக்தர் | 00 |
| ஸ்கூர் | Lbw b அக்ரம் | 02 |
| பி. எல். கோட்ஸ் | not out | 24 |
| வன்வியூரன் | C வக்கார் b சக்லைன் | 14 |
| உதிரிகள் 17 | | |
| சகல விக்கெட்டுக்களும் இழந்து 84 (17.4 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு - பாகிஸ்தான் அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அக்ரம் | 9 | 1 | 28 | 5 |
| அக்தர் | 8 | 1 | 46 | 4 |
| சக்லைன் | 0.4 | 0 | 01 | 1 |

பாகிஸ்தான் அணி நமீபியா அணியை 171 ஓட்டங்களால் வென்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விமானப்படைக் கண்காணிப்பு பலவீனமான நிலையிலேயே!

## விமானப்படை அதிகாரிகள் கருத்து

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் ஆகாயக் கண்காணிப்பு பலவீனமான நிலையில் இருப்பதால், சர்வதேச கடற்பரப்பில் நடமாடும் ஆயுதக் கப்பல்களைக் கண்காணிக்க இந்திய உதவியை நாடவேண்டியிருப்பதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்கு அப்பால் நடமாடுகின்ற கப்பல்களைக் கண்காணிக்க முடியாத நிலையில் விமானப்படையிருக்கின்றது.

விமானப்படையிடம், இத்தகைய கண்காணிப்புப் பணிக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு பீச் கிராப்ட் விமானங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் ஒன்று பழுதடைந்து போயிருக்கின்றது.

இத்துடன் சி-130 விமானங்களும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இதனால், சந்தேகத்திற்குரிய கப்பல்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க, இந்திய உதவியையே நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது.

இந்தியா தகவல்களைத் தந்தாலும் போதிய நடவடிக்கை எடுப்பதற்கேற்ற வளங்களும் இல்லை. அத்துடன் இந்தியா- இலங்கை கூட்டு ரோந்துத் திட்டமும் வெற்றியளிக்கவில்லை. ,

பல சமயங்களில், சர்வதேசக் கடற்பரப்பில் நடமாடிய சந்தேகத்திற்குரிய கப்பல்களைச் சோதனையிட்டபோது, அவை வெறும் சரக்குக்கப்பல்கள் எனக் கண்டறியப்பட்டன.

இதேவேளை, கடந்த வாரம் ஆயுதக்கப்பல் ஒன்று இலங்கைக் கடற்பரப்புக்கு அண்மையில் காணப்பட்ட தாகவும், இதைக் கைப்பற்ற நடவடிக்கை எடுத்தபோது, இது தொடர்பான தகவலகள் கசிந்து விட்டதாகவும் வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை.

இதனை விசாரணைகளில் இருந்து கண்டறிந்துள்ளதாகவும் விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஆளில்லா வேவு விமானங்களின் பற்றாக்குறை தமக்குப் பெரிய இழப்பாக இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மணலாறில் கைதான சிப்பாய் மார்ச் 7 வரை தடுப்புக்காவலில்!

### கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவு

மணலாறுக் காட்டுப் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் நுழைந்தபோது கைதான இராணுவச் சிப்பாயை மார்ச் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தச் சிப்பாயை தமிழீழக் காவற்துறையினர் நீதிமன்றத்தில் நிறுத்தியிருந்தனர். தடுப்புக் காவலில் உள்ள இராணுவச் சிப்பாயை விடுவிப்பது குறித்து அரசாங்கம் சட்ட ரீதியாக அணுகவேண்டுமென புலிகள் தெரிவித்திருக்கின்றனர் என்றும், இதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டி வருவதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையிலேயே கைதான சிப்பாயின் தடுப்புக்காவல் மூன்றாவது தடவையாக நீடிப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோபாலபுரத்தில் நினைவுத்தூபி; கண்காணிப்புக்குழு தலையிடாது!

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோபாலபுரத்தில் நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை யுத்த நிறுத்த மீறல் அல்ல என திருமலை மாவட்ட உள்ளூர் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கோபாலபுரம் நினைவுத்தூபி விவகாரத்தில் தாம் தலையிடப்போவதில்லை என்று முடிவு செய்திருப்பதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸாரின் பஸ் மீது ஏறாவூரில் கிரனேட் வீச்சு

ஏறாவூர் புகையிரத நிலையத்துக்கு அருகில் பொலிஸாரின் பஸ் வண்டி மீது நேற்று முன்தினம் இரவு கைக்குண்டு வீசப்பட்டது.

அந்தப்பகுதியில் நடைபெற்ற களியாட்ட விழாவுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காகப் பொலிஸார் சென்ற பஸ் வண்டியே தாக்குதலுக்கு இலக்காகியது.

இந்தச் சம்பவத்தின் போது, ஒரு பொலிஸ் அதிகாரி காயமடைந்தார்.

இரண்டு கோஷ்டிகளுக்கு இடையில் இடம்பெற்ற மோதலின் போது, ஒரு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் வீசிய கைக்குண்டே பஸ்சில் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பஸ்ஸுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொலைபேசி இணைப்பு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக மன்னார் தொலைபேசிப்பரிவர்த்தனை நிலையத்திலிருந்து இணைப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை ரெலிகொம் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

மடுத்தேவாலயம், பரப்புக்கடந்தான் மற்றும் ஏனைய பிரதேசங்களிலுள்ள பொது அமைப்புக்கள், வர்த்தகர்கள், அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களுக்கு இணைப்புக்களை வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக ரெலிகொம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த மாத முற்பகுதியில் தொலைபேசி இணைப்புக்களை வழங்கமுடியும் என எதிர்பார்ப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - கிளிநொச்சி மாவட்டத்திற்கு இதுவரை 35 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த ரெலிகொம் அதிகாரி தெரிவித்தார். (ச)

### திருமறைப் பயிற்சியகம் இன்று திறந்து வைப்பு

மன்னாரில் யாழ். மாவட்ட அமலமரித் தியாகிகளால் புதிதாக அமைக்கப்பட்ட "ஞானோதயம்" திருமறைப் பயிற்சியகம் இன்று மாலை 5 மணிக்கு, மட்டு - திருமலை மறை மாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையால் புனிதப்படுத்தப்பட்டு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

### வேவு பார்க்க...

பெண்போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மேலும், இராணுவம் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது சமாதானத்தின்பால் தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இருக்கும் நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் சிதைக்கின்றது. எனவே, இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான சம்பவங்கள் நிகழாது, சம்பந்தப்பட்ட தரப்பினர் அத்துமீறி செயற்படாது, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தளபதி தீபன் மேலும் தெரிவித்தார்.

### வெங்காயம்...

அடைவார்கள் எனத் தமக்குத் தெரிவிக்குமாறும் அமைச்சர் ரவி கருணாநாயக்க கேட்டுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிப்பாயின்...

புலிகளின் செயலகம் ஒன்றில் நடைபெற்றது . தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமுனைப் போர்த்தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் அறிவு, இராணுவச் சிப்பாயின் உடலை, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரதிநிதியிடம் கையளித்தார். உயிரிழந்த ராணுவச் சிப்பாய், விஜயபாகு காவற்படையைச் சேர்ந்த கே.பி.ஏ. தர்மசேன என இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் மாணவர் பங்கேற்றால் கைது!

## மிரட்டுகிறார் வவுனியா இராணுவத் தளபதி

வவுனியா மாவட்டத்தில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற பாடசாலை மாணவர்களும் மற்றும் அதை அனுமதிக்கின்ற அதிபர்களும் கைது செய்யப்படுவார்கள் என வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தெரிவித்தார்.

வவுனியா கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தின் போதே மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இதனைத் தெரிவித்தார்.

கடந்த 3ஆம் திகதி சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியையும், 4ஆம் திகதி நடத்தப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டத்தையும் அடுத்தே, வன்னிப் பிராந்தியத் தளபதி இவ்வாறு எச்சரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இனிவரும் காலங்களில் மாணவர்கள் இத்தகைய பேரணிகளில் கலந்து கொண்டால், அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அரசின் சமாதான முயற்சிகளைப் பாதிக்கச் செய்யும் இத்தகைய பேரணிகளில் மாணவர்கள் கலந்து கொள்வதைத் தடுக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் வன்னி இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள், மாணவர்கள் பேரணிகளில் கலந்து கொள்வதை தம்மால் தடுக்க முடியாதென்றும், தடுத்தால் அத்தகைய நடவடிக்கை அமைதியின்மையை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தனர்.

### நெதர்லாந்து அணியை இங்கிலாந்து வென்றது!

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து அணி நெதர்லாந்து அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது.

ஈஸ்ட் லண்டனில் நடந்த போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி, 9 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 23.2 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

### கிளாலியில்...

ராணுவத்தரப்பு விடுத்துள்ள பிறிதொரு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பிறைவேட் கே.பி.ஏ.தர்மசேன என்ற இந்த இராணுவச்சிப்பாய் - வெள்ளியன்று காலை நடந்த உடற்பயிற்சிக்குப் பின்னர் காணாமல் போயிருந்தார். கிளாலி இராணுவ முகாமின் முன்னரங்கக் காவல் நிலையில் கடமையாற்றி வந்த இவர், சம்பவதினம் காலை 6.15 மணியளவில் காணாமற்போயிருந்தார்.

இவர் மற்றுமொரு சிப்பாயுடன் சம்பவதினத்திற்கு முன்னிரவு வாக்குவாதத்திலும் சச்சரவிலும் ஈடுபட்டிருந்தார். இது பற்றியும் விசாரணை செய்யப்பட்டிருந்தது.

இவர் காணமற்போனபோது - தனது ரி-56 ரக துப்பாக்கியுடன் 30 தோட்டாக்களையும் வைத்திருந்தார்.

இவர் காணாமற்போனது தொடர்பாக கொடிகாம் பொலிஸ் நிலையத்தில் வெள்ளியன்று 12.35 மணிக்கு புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக பொலிஸாரும், இராணுவப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தபோதே -

மேற்படி சிப்பாய் பலியான செய்தி கிடைத்ததாக இராணுவத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

# கட்டுப்பாட்டுடனும் உறுதியுடனும் விடுதலைப்புலிகள் செயற்படுகின்றனர்

## தளபதி லெப். கேணல் அறிவு தெரிவிப்பு

கிளாலிப்பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தைப் பார்க்கும்போது சமாதானத்தைக் குழப்புவதற்கான நடவடிக்கை என்றே நினைக்கின்றோம். இது புலிகளின் எல்லைக்குள் வந்தபோதுதான் இந்தச் சம்பவம் நடந்தது என்று வடமுனைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் அறிவு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, நாங்கள் கட்டுப்பாட்டுடனும் உறுதியுடனும் இருக்கின்றோம். சிறிலங்கா படையினர்தான் இதில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் எனத் தெரிவித்தார்.

## சட்டம் ஒழுங்கை...

தவிர்ப்பதற்காக இருதரப்பும் அங்கீகரித்த இடைக்கால ஏற்பாடொன்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையும்போது இராணுவச்சீருடையை ஒத்த இடுப்புப்பட்டிகளை அணிந்திருந்தால் தாமாகவே அதனை அகற்றிக் கொள்வார்கள்.

இதனை அவர்கள் கடைப்பிடிக்கத் தவறும் பட்சத்தில் அரச படைகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியை உடனடியாக அழைக்க வேண்டும். இவ்வாறு விடுதலைப் புலிகளும் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் கண்காணிப்புக் குழுவினரை அழைக்க முடியும்.

கண்காணிப்புக்குழு நேரடியாக இவ்விடயத்தை தனது கவனத்திற்கொண்டு, மேற்படி வழிமுறைக்கு இணங்க இருதரப்பும் நடப்பதை அறிவுறுத்தும். இது இராணுவச் சீருடையை ஒத்த இடுப்புப்பட்டிகளை அணியும் விவகாரத்திற்கு மட்டுமே பொருந்தும்.

இதேவேளை, சாதாரண இடுப்புப்பட்டிகளை புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அணிவதற்கு தடையேதும் இருக்க மாட்டாது.

அரசாங்கத்தரப்பும், விடுதலைப் புலிகளும், ஒருவருக்கொருவருடனான முரண்பாடுகள் ஏற்படும் சகல சந்தர்ப்பங்களையும் தவிர்த்துக் கொள்ள சீராக நடந்துகொள்ள வேண்டுமென கண்காணிப்புக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை - வடக்கு, கிழக்கிலுள்ள அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் நிலைமைகளைச் சமாளிக்க, சுமுக நிலையை ஏற்படுத்த, நன்றாகப் பயிற்சி பெற்ற நவீனமான பொலிஸ் படையொன்று தேவையென கண்காணிப்புக்குழு மதிப்பீடு செய்துள்ளது.

யுத்தகாலங்களில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு இராணுவம் தேவையாக இருக்கலாம். ஆனால், அமைதி நேரத்தில் அவ்வாறு இராணுவத்தைப் பயன்படுத்துவது தேவையற்ற வன்முறைகளைத் தோற்றுவிக்கவும் பதற்றத்தை அதிகரிக்கவுமே துணை செய்யும்.

போர் நிறுத்தக் காலத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவித்த பல நிகழ்வுகளிலும் அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் தலைமைகள், நீண்ட பிரச்சினைக்குத் தீர்வொன்றை நாடுமுகமாக மிக உறுதியான அர்ப்பணிப்பைக் காட்டி வந்துள்ளன என்பதில் சந்தேகமில்லை.

இனிவரும் நாட்களிலும் நிரந்தர அமைதிக்காக இரு தரப்பும் நம்பிக்கையூட்டும் வண்ணம் - பிரச்சினைகளை இணக்கமுடன் கடந்து செல்ல வேண்டுமென்றே நாம் கருதுகின்றோம்.

- என கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.